# மணிமேகலை

MANIMĒKALAI (1039)

By
Cittalaiccāttanār

ஏ. எஸ். பி. ஐயர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்
எழுதியது

Abridged by
Pancāpakēca Ayyar
(AES)

CONNEMARA PUBLIC LIBRARY
4 - JUN 1955
MADRAS

(2)

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

உரிமை பதிவு

1951

ரூபாய் ஒன்று

முதற் பதிப்பு, 1951
உரிமை பதிவு

51907
SV2K
26608

அல்லயன்ஸ் பிரஸ்,
மயிலாப்பூர் :: சென்னை-4

CONNEMARA PUBLIC LIBRARY
4 - JUN 1955
MADRAS

# முகவுரை

தமிழிலுள்ள ஐந்து பெரிய காவியங்களுள் 'மணிமேகலை' ஒன்று. இதுவும் மற்றொன்றாகிய 'சிலப்பதிகார' மும் பழமையும் சிறப்பும் பொருந்தியவை. 'சிலப்பதிகாரம்' என்பது மணிமேகலையின் தந்தையாகிய கோவலனையும், அவன் மனைவி கண்ணகியையும், அவன் காதலியும் மணிமேகலையின் தாயுமாகிய மாதவியையும் பற்றிய கதை. 'மணிமேகலை' கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப் பட்டது. கோவலனைக் கள்வன் என்று அநியாயமாகப் பாண்டிய அரசனான நெடுஞ்செழியன் தூக்கிலிட்டபின், பத்தினித் தெய்வமான கண்ணகி மதுரை பற்றி எரியும்படி சாபம் இட்டுவிட்டுக் கணவனுடன் சென்றதற்குமேலே, மணிமேகலையைப்பற்றியுள்ள வரலாறு இதில் அடங்கி யுள்ளது. கடைச்சங்ககாலப் புலவர்களுள் ஒருவராகிய சாத்தனார் எழுதியது இந்நூல். 'சிலப்பதிகார'த்தின் ஆசிரி யரும் சேர அரசனான செங்குட்டுவனின் தம்பியுமாகிய இளங்கோ அடிகள் இவருடைய நண்பர். இளங்கோ 'சிலப்பதிகார'த்தை எழுதும்போது பௌத்த பிக்ஷுவாக இருப்பினும் அக்காவியத்தில், பிற சமயங்களின்மீது அருவருப்புக்கொண்டு அவர் ஏதும் எழுதினதாகத் தெரியவில்லை.

இந்த இரண்டு பெரிய காவியங்களையும் படிக்கும் போது அக்காலத் தமிழ்ப் புலவர்கள் இனிய தூய தமிழ்

மட்டுமன்றி வடமொழியிலும் வல்லவர்களாக இருந்தனர் என்பதும், தமிழ்ப் பண்பில் ஊறிய அளவு ஆரியப்பண்பிலும் சிறந்து விளங்கினர் என்பதும் தெரியவரும். நம் நாட்டிலுள்ள பல சமயங்களையும் சமயவாதங்களையும் பற்றி 'மணிமேகலை'யில் படிக்கும்போது, 'ஆரியங்கண்டேன், தமிழ் கண்டேன்' என்ற அப்பர் வாக்கு நம் நினைவுக்கு வருகிறது. அவைமட்டுமா? தமிழ் மன்னர்களான மநுநீதிகண்ட சோழன், நெடுஞ்செழியன், காந்தமன்' தொடித்தோட் செம்பியன், ககந்தன் முதலியவர்களுடன் ஆரியவீரர்களான பரசுராமன், ராமன், கிருஷ்ணன், உதயணன் இவர்களைப்பற்றியும், வேதகாலத்து அந்தணர்கள் முனிவர்களுடன் பௌத்த, ஜைன, தமிழ்ப்பெரியார்களைப்பற்றியும் படிக்கும்போது அவ்வாக்கின் உண்மையை நாம் உணர்கிறோம். சோழமன்னர்கள் தம்மைச் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களென்றும், பாண்டியரும் சேரரும் தம்மைச் சந்திர வம்சத்தினரென்றும் கூறிக்கொள்கிறார்கள். சோழர்கள் தாம் தன்னலமின்றி வாழ்ந்த வட நாட்டுமன்னனான சிபியின் வழி வந்தவர்கள் என்றும், பாண்டியர்கள் தாம் பாண்டவரின் சந்ததிகள் என்றும், சேரர்கள் தாம் யதுகுலத்தினர் என்றும் கூறிப் பெருமை கொள்வார்கள். இதிலிருந்து தமிழர் 'தென்னாட்டு ஆரியர்' என்பது தெளிவாகிறது. 'ஆர்ய'என்ற வட சொல் 'ஐயா' எனத் தமிழில் மருவித் தமிழர் ஒருவரையொருவர் அவ்வாறே அழைப்பதை இன்றும் காணலாம். வேதம் புகழும் தெய்வமான இந்திரனது 28 நாளைய விழா நடைபெறுகிற சமயம் கதை ஆரம்பமாகிறது. நாவலந்தீவு அல்லது ஜம்பூத்வீபம் எனக் குறிப்பிடுவதினின்று பாரத நாட்டின் ஐக்கியமே புலவரின் நோக்கமாக இருத்தலைக் காண்கிறோம். புண்ணிய ராஜனிடம் சாவகநாட்டுப் பிரதானி 'மணிமேகலையைப்பற்றிக் கூறும்போது, "நாவலந் தீவிலேயே அழகிலும் நற்குணத்திலும் ஈகையிலும்

இவனை ஒப்பவர் எவரும் இல்லை" எனப் பாரததேசம் முழுவதையும் குறிப்பிடுகிறான். காவிரிப்பூம்பட்டினமே ஜம்பூத்வீபத்தின் நெற்களஞ்சியம் என்றும், ஈகையில் தலைசிறந்து விளங்குவதும் அதுவே என்றும் வருணிக்கப்பட்டுள்ளது. சாத்தனாரையும் இளங்கோ அடிகளையும் போலவே அசோக சக்கரவர்த்தியும் தம் கல்வெட்டுக்களில் ஜம்பூத்வீபம் என்று பாரத நாடு முழுவதையுமே குறிப்பிடுதல் இங்கே கவனிக்க வேண்டியதாகும். இந்த இரண்டு காவியங்களிலும் பெரும்பாலும் தமிழ்ப்பண்பே காணப்படுகின்றது என்றாலும் பல இடங்களில் பரந்த ஐக்கிய நோக்கம் புலனாகிறது. சோழ அரசனது அரண்மனை மண்டபம், 'மகத வினைஞரும் மராட்டக்கம்மரும் அவந்திக் கொல்லரும் யவனத்தச்சரும் தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிச்' செய்ததாகும். பஞ்சத்தில் அடிபட்டுக் காஞ்சியில் மணிமேகலையை அண்டியவர்களுள், 'மூவறு பாடை (18 பாஷை) மாக்களும்' இருந்தனர். இப்போது வங்காளத்தில் நிகழ்ந்த பஞ்சத்தில்கூட அத்தனை பாஷை பேசுவோரை நாம் ஒரே சமயத்தில் காண முடியாது!

இந்த இரண்டு ஒப்பற்ற நாகரிகமும் இணைந்ததால் அற்புதமான புதியகருத்துக்கள் தோன்ற இடம் உண்டாயிற்று. அக்கால மன்னர்கள் தந்நலமற்றுக் குடிகளைக் காத்துவந்தனர். 'பகவத்கீதை'யில் கூறியிருப்பதுபோல் உலக நன்மை ஒன்றே அவர்கள் நோக்கமாக இருந்தது. பஞ்சமும் வெள்ளமும் விவசாயத்துக்குப் பகை. அப்படிப்பட்ட தேசத்தில் தற்சாந்தியாக அல்லாமல் நிலையான பரிகாரம் தேடினார்கள். மனித யத்தனத்தோடு தெய்வ யத்தனமும் வேண்டும் என்ற உன்னத லக்ஷியத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள். நெருக்கடியான சமயங்களில் தமக்கென வாழாப் பெரியார் ஒருவரை அண்டி அவரது சொற்படி அரசன் நடப்பானே யொழியச் சுயநலங் கொண்ட மந்திரிகளின் தந்திரமொழிகளுக்குச் செவி

கொடுக்கமாட்டான். இந்திரன் மழைபொழிய அருள் புரிகிறான். ஆண்டுதோறும் பலியை ஏற்று அங்காடிப்பூதம் துஷ்டர்களைத் தண்டிக்கிறது. பலி கொடுப்பது நின்றவுடனே அதுவும் சும்மா இருந்துவிடுகிறது. அரசன் தன் துயரையே பெரிதாக மதித்து நாட்டு விழாவை மறந்ததால் ஊரையே கடல் கொண்டு விடுகிறது.

விழாக்காலத்தில் வீதிகளும் மனைகளும் ஆலயங்களும் அலங்கரிக்கப்பட்டுத் தூய்மையாக விளங்குகின்றன. எங்கே பார்த்தாலும் பாட்டும் கூத்தும்தான். பல சமயவாதிகள் சமயபோதனை செய்கிறார்கள். 'உற்சவகாலங்களில் தெய்வமும் மனிதரும் கலந்துறைவதுபோல் அனைவரும் உடன்பிறந்தவர்களாகப் பழகவேண்டும்' என்று உபதேசிக்கிறார்கள்.

பட்டினி கிடந்து உழலும் இந்திய மக்களை வாட்டிவரும் பஞ்சமும் நோயும் யுத்தபீதியும் அப்படியே சித்திரிக்கப்படுகின்றன. இந்திர விழா நடக்கப்போவதை முரசு அறைவோன் அறிவிக்கையில், 'பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க' என வாழ்த்துகிறான். தீவதிலகை என்னும் தேவதை மணிமேகலையிடம், 'பசிப்பிணி என்னும் பாவி குடிப்பிறப்பு அழிக்கும். விழுப்பம் கொல்லும். பிடித்த கல்விப் பெரும் புணை விடும். நாண், அணிகலையும். மாண் எழில் சிதைக்கும். புறங்கடை நிறுத்தும்' என்கிறாள். பஞ்சத்தில் அடிபட்டவர்கள் பலநாள் கழித்து நல்லுணவைப் பெற்றால் ஏறுமாறாக உண்ணுவது சகஜம்; எவ்வளவு தின்றாலும் வயிறு நிரம்பாமல் யானைத்தீ என்னும் பசிநோயால் காயசண்டிகை வருந்தும் காட்சி பஞ்சத்தில் அடிபட்டோரின் அந்நிலையை அப்படியே எடுத்துக் காட்டுகிறது.

மணிமேகலையின் கைக்கு வந்த ஆபுத்திரனது பிச்சைப் பாத்திரம் மேனாட்டுக் கொடைவள்ளலான ஆண்ட்ரூ கார்னெகி என்பவரின் 'தகுதிக்கு ஏற்ற' தான தருமங்களை

நினையூட்டுகிறது. மகாபாரதத்தில் வரும் அக்ஷயபாத்திரம், ஒன்றும் போடாமலே ஓயாமல் கொடுப்பதைப் போலன்றி ஆபுத்திரனது அமுதசுரபி முதலில் ஏதேனும் பிச்சை இட்டால்தான் சுரக்கிறது. தமிழர் நல்ல பகுத்தறி வாளிகள்; ஆதலால்தான் வெறுங்கற்பனையைக் கைக் கொள்ளாமல் கூடியவரை உண்மை எனத் தோற்றும்படி எழுதினார்கள்.

இளமையும் அழகும் பொருந்திய நங்கையர் தன்னந் தனியாகப் புறப்பட்டுச் செல்லலாகாது என்பதும், அப் போதுதான் கன்றுபோட்ட பசுவினருகில் போய் நிற்கக் கூடாது என்பதும், வேதத்தையும் யாகத்தையும் ஆபுத் திரன் மறுத்துக் கூறியபோது பிராம்மணர்கள் அவன்மீது துவேஷங் கொண்டதும், அவனை அவர்கள் ஒதுக்கிவைத் ததும், அக்காலச் சமயக் கணக்கர் எவரும் பெண்மக்க ளுக்குப் போதிக்க உடன்படார் ஆகையால் ஒவ்வொரு கொள்கையின் நுண்மையையும் அறிவதற்கு மந்திரத் தால் தன் உருவை மணிமேகலை மாற்றிக்கொள்ளவேண்டு மென்று தெய்வம் அவளுக்கு உரைப்பதும் பகுத்தறிவு பொருந்திய பாகங்களாகும். மற்ற இரு வரங்களும் அப் படியே. அக்காலத்தில் போக்குவரத்துச் சாதனம் சரி யாக இராததால் மலைகளையும் நதிகளையும் கடப்பதற்குப் பறக்கும் மந்திரம் அவசியமாயிற்று. 'விடமின்' எனப் படும் சத்துப்பொருள் மாத்திரை இராத அக்காலத்தில் வீடு வாயில் இல்லாத நடுவழியில் பசியைத் தணித்துக் கொள்வது எப்படி? ஆகவே, அதற்கும் ஒரு மந்திரம் வேண்டியிருந்தது.

காமம், வெகுளி என்னும் இரண்டின் தன்மையும் நன்றாக விளக்கப்பட்டுள்ளன. பஞ்சமாபாதகங்களுள் கொலை, களவு, கள் உண்ணுதல், பொய் பேசுதல் இவை களைவிடக் காமத்தை வெல்லுவதுதான் அரிது என்ற உண்மை அறிவுறுத்தப் படுகிறது. தெய்வத்தன்மை

பொருந்தியவர்கள்கூட அதற்கு அடிமையாகிவிடுகிறார்கள் என்பது சுதமதியை வித்தியாதரன் தூக்கிச் செல்வதினின்றும் தெரிகிறது. முன்னே வாழ்ந்த சோழ அரச குமாரர்கள் இருவர் மருதி, விசாகை என்னும் பெண்மணிகளைக் கண்டு மயங்கினது போலவே உதயகுமரனும் மணிமேகலைமீது மோகங்கொள்கிறான். இந்திர விழாவின் போது செட்டிமகனை எட்டிகுமரன் கணிகை ஒருத்தியின் மயலில் ஈடுபட்டிருக்கிறான். சாதுவன் என்ற வணிகன், கற்புடை மனையாளான ஆதிரையை விட்டுப் பரத்தையை விரும்பி வாழ்கிறான். விலைமகளாகி மகனிடமே கள்ள உறவு கொண்ட ஒருத்தியின் வரலாறு மகா கோரமானது. அவள் கடைசியில் ஒரு கிணற்றிலே விழுந்து தற்கொலை புரிந்து கொள்கிறாள். அவள் மகனும் மேன்மாடத்தினின்றும் விழுந்து மடிகிறான். மணிமேகலை உதயகுமரனுக்கு நரை மூதாட்டி ஒருத்தியைக் காட்டி, "மன்னவன் மகனே! இளவயதில் இவள் என்னைவிடப் பேரழகியாக இருந்திருக்கவேண்டும். இப்போது பார்; தலையெல்லாம்நரைத்து, தோல் சுருங்கி, வண்ணம் திரிந்து, கண் பஞ்சடைந்து நிற்கிறாள். இந்த மாமிச உடல் அத்தகையதே. ஆகையால் சதைப்பற்றை விட்டொழி: உயர் பொருளை நாடு' என்கிறாள். உதயகுமரனின் தாயாகிய இராசமாதேவி அனுப்பிய காமுகன் ஒருவன் ஒருநாள் இரவு மணிமேகலையைக் கெடுக்க எண்ணி அவளை அடைத்திருக்கும் அறையில் நுழைகிறான். அங்கே தான் எதிர்பார்த்திருந்த அழகிக்குப் பதில் அரக்கனைப் போல்கொடூரமாயும், கருநிறமும், உருளுகிற செங்கண்ணும், காட்டுப்பன்றி போல் பற்களும் உள்ள ஓர் ஆண்மகன் இருப்பதைக் காண்கிறான். கண்ட மாத்திரத்தில் இனி அங்கே இருந்தால் இன்னும் என்ன என்ன ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று எண்ணிப் பைத்தியக்காரனைப் போல் சோழநாட்டை விட்டே ஓடிவிடுகிறான்.

மணிமேகலை உபவனத்தில் காமத்தின் இயல்பை விளக்கும்போது, அது அனைத்தையும் அடக்கியாளும் சக்தி வாய்ந்தது என்னும் பகுதி சிறந்ததாகும். கற்பின் பெருமை அளவிடற்கரியது; உலகரீதியில் கற்புடைய மனைவியாக இருந்தும் இளவரசன் ஒருவன் மனத்தில் காம விகாரம் தோன்றுவதற்குத் தான்காரணமாய்இருந்ததால் தன்னிடத்திலும் குறை இருக்கவேண்டும் என்று மருதி கருதுவது நியாயமே. ஆதிரையும் கண்ணகிபோல் கற்பின் சிறந்த உருவாய் விளங்குகிருள். 'நம்மால் ஆவது ஒன்று மில்லை. எல்லாம் தெய்வச் செயல்' என்பதும், இப்பிறவி யில் கணவனும் மனைவியுமாய் இருப்போர் முந்திய எல்லாப்பிறவிகளிலும்அவ்வாறே இருந்தார்கள்என்பதும் அவர்கள் கருத்தாகும். 'நறுந்தாது உண்டு நயனில் காலை வறும் பூத்துறக்கும் வண்டி'ற்கு ஒப்பிடப்படுகிருள் ஒரு விலைமாது. கள் அருந்தி, பொய் பேசி, கண்டவரையெல் லாம் விரும்பி, தீய நினைவுகளைக் கொண்டு வாழுதலே பரத்தையின் தொழில் என வருணிக்கப்பட்டுள்ளது.

வெகுளியின் தன்மை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தேவர்களின் சினம் பொல்லாதது, அனைத்தையும் அழிக்க வல்லதுஎன்பது,தேவாலயத்தின்மீதுபறக்கலாகாது என்ற தெய்வ விதியை மீறிக் காயசண்டிகை பறந்துசெல்வதால் விந்தியாவாசினி வெகுண்டு அவளைத் தன் வயிற்றில் அடக் கியதிலிருந்தும், அரசன் இந்திர விழா நடத்தத் தவறிய தால் மணிமேகலா தெய்வம் புகார் நகரத்தைக் கடலை விட்டு அழித்ததினின்றும் தெரியவரும். தன்மகனை உதய குமரனின் கொலைக்குக் காரணமாயிருந்த மணிமேகலை யினிடம் இராசமாதேவிக்கு உள்ள கோபம் தனி ரக மானது: நயவஞ்சகக் கோபம் அது. வாசந்தவை என்னும் முதியவள் சொற்படி அவள் மன்னனைச் சார்ந்து, மணி மேகலைக்குச் சிறை தகுதியன்று என்றும், தன்னிடமே அவளை வைத்துக்கொள்ளப் போவதாகவும் சொல்லி

மணிமேகலைக்குத் தீங்கிழைத்து அவளைக் கொல்லவும் பார்க்கிறாள். தனக்கு இணங்காத மணிமேகலையை எவ்விதமாவது கெடுக்கவேண்டும் என்ற உறுதிபூண்ட உதயகுமரன் தன் அழிவைத் தானே தேடிக் கொள்வதும், மனைவியின் ஊடலைத் தீர்ப்பதற்கு அவளது அடியை வணங்குகையில், அன்னியன் ஒருவன் அதனைக் கண்டதை அறிந்து இராகுலன் சினமுறுவதும், தான் தாமதித்து வந்ததால் அச்சமுற்றுப் பரிசாரகன் மடைக் கலத்தைக் கை தவறவிட இராகுலன் அவன்மீது சண்டாளகோபம் கொள்வதும், பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை தனக்கு உணவாகக் கிடைக்கும் நாவற்கனியைக் கால் தவறிக் காயசண்டிகை சிதைத்ததால் விருச்சிகன் வெகுள்வதும், வித்தியாதரனாகிய காஞ்சனன் தன் மனைவியே தன்னை மதியாமல் உதயகுமரனுடன் நெருங்கிப் பழகுகிறாள் என்று காயசண்டிகை உருவில் தோன்றிய மணிமேகலைமீது கோபம் கொள்வதும், இக்கதையில் ஆழ்ந்த மனத்தத்துவம் அமைந்திருப்பதற்குச் சில சான்றுகளாகும். புதிதாக ஈன்ற பசு ஒன்று தன் அருகில் வந்த கௌசிகனை முட்டி அவன் வயிற்றைக் கிழிப்பதும், யாகத்தில் பலியிடுவதற்காகத் தன்னைப் பிடிக்கவந்த பிராம்மணனை ஒரு பசு முட்டிக் கொல்வதும் மிருகங்களின் மனப்போக்கை விளக்குகின்றன. ஆசிரியர் அஹிம்ஸையின் உயர்வை அறிந்தவராயினும், அதனால் கோழைத்தனமும் ஏற்படுகிறது என்பதை எடுத்துக் காட்ட மறக்கவில்லை. கௌசிகனை மாடு முட்டி அவன் குற்றுயிரும் குறையுயிருமாய் வந்தபோது சமணர்கள் அதைக் கண்டு அஞ்சியது இதற்கு ஒரு திருஷ்டாந்தமாகும்.

எதிர்பாராத விதத்தில் சில நிகழ்ச்சிகள் அற்புதமாகப் பின்னப்பட்டிருப்பதை இதில் காணலாம். தான் கொடுத்த வரத்தை ஏற்க மறுத்ததால் இந்திரன் ஆபுத்திரனிடம் சினமுற்று நாடு மலிய மழை பொழிந்து வள

முறச்செய்து ஒருவரும் ஆபுத்திரன் அளிக்கும் அமுதுக்குக் காத்திராதபடி செய்வதும், அதனுல் ஆபுத்திரன் வேறு நாடு சென்று அங்கே தானம் கேட்போர் எவரும் இராமை யால் பட்டினி கிடந்து தன் உயிரை மாய்த்துக்கொள்வதும் அதிசயங்களே யாகும். உதயகுமரன் இறந்ததால் வருந்தும் பாமர மக்கள் மணிமேகலையைத் துன்புறுத்தப் போகிருர்களே என்று அரசன் அவளைச் சிறையில் அடைக்கிருன். அக்கால நீதி முறையை அறியாதவருக்கு இம்மாதிரி அவள் நன்மையை உத்தேசித்து அவளைக் காவலில் வைப்பது விநோதமாகத் தோற்றலாம். தன் மகன் இறந்த விதத்தை அறிந்து தன் கையாலேயே அவனைத் தண்டித்திருக்கக் கூடாதா என அரசன் வருத்தப்படுவதும், அவனுக்கு முன்னே ஆண்ட ககந்தன் என்பவன், கற்புடைய பெண்டிரைத் தன் மக்களும் விரும்பிய குற்றத்திற்காக அவர்களை ஒருவர்பின் ஒருவராகக் கொல்லுவதும், முறையிட வருவோர்க்கென ஆராய்ச்சிமணி கட்டிவைத்த சூரியவம்ச அரசர்களது பக்ஷபாத மின்மையையும் தயாதாக்ஷிண்ணியமற்ற நீதியையும் புலப்படுத்துகின்றன. மனிதரைக் கொன்று தின்னும் நக்கசாரணர் வாழும் தீவில் அவர்களுக்குப் புலால், கள், பெண்ணுசை இம் மூன்றினுலும் வரும் கேடுகளையும் வெகு சாதுரியமாக எடுத்துரைக்கிருன் சாதுவன். 'உடலை விட்டுப் பிரிந்தும் உயிருக்கு அழிவில்லை. அது வேற்றுலகம் செல்கிறது' என்பதை அவன் விளக்கும் விதத்தைப் பாருங்கள்; 'உற்றதை உணரும் உடல் உயிர் வாழ்வுழி; மற்றைய உடம்பே மன்னுயிர் நீங்கிடில் தடிந்து எரியூட்டினும் தான் உணராது: எனின் உடம்பிடைப் போனது ஒன்று உண்டு என உணர் நீ. போனுர் தமக்கு ஓர் புக்கில் உண்டு என்பது யானே வல்லேன் யாவரும் உணர்குவர்' என்கிருன். அவர்கள் தகுதிக்கேற்ற அளவு அறத்தைக் கடைப்பிடிக்கும்படி அவன் கூறும் பகுதி சிறந்ததாகும்.

தென்கடல் தீவுகளில் வாழும் மக்களிடையே பிற்காலத்தில் கிறிஸ்துவக் குருமார்களுக்குள்ள செல்வாக்கு நக்க சாரணரிடையே சாதுவனுக்கும் ஏற்படுகிறது. அக்காலத் தமிழர்கள் பல நாடுகளில் குடியேறி அங்குள்ள மக்களைச் சீர்திருத்தி உள்ளனர். கிழக்கிந்தியத் தீவுகளைப்பற்றி இந்தக் காவியத்தில் வந்திருப்பதே அதற்கு ஒரு சான்றாகும். இதனால் அன்றோ ஔவையார் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்றார்.

இராசமாதேவிக்கு மணிமேகலை, உயிரிடத்து அன்பு செலுத்துவதையும் உடலிடத்து அன்பு செலுத்துவதையும் குறித்துக் கூறும் மொழிகள் பொருத்தமாயும் தெளிவாயும் யாவரும் ஒப்பக் கூடியனவாயும் அமைந்துள்ளன. சிறைக்கூடத்திற்கு அவள் செல்வதும், அதனை அறக்கோட்டமாக்கும்படி அவள் அரசனை வேண்டியதும், அக்காலத்திலேயே சிறைச் சீர்திருத்தமும் விடுதலையான கைதிகளுக்கு உதவும் சங்கமும் ஏற்படுவதற்கு அறிகுறிகளாகும். சம்பாபதி கோயிலில் உதயகுமரன், 'மணிமேகலையை நீ காட்டாயாயின் இவ்விடம் விட்டுப் போகேன்' என்று சபதம் கூறிய போது அங்கிருந்த சித்திரங்களில் ஒன்று, 'நீ ஆராயாமல் வஞ்சினம் கூறினை. இதனால் யாதொரு பயனும் இல்லை' என்கிறது. மணிமேகலையை நெருங்கி அவளைக் கணிகையர் குலவழக்கப்படி நடக்குமாறு வற்புறுத்த வேண்டுமென்று சித்திராபதி உதயகுமரனைத் தூண்டுவது அறத்தோடு பொருந்தாத முறையீடாகும்.

விரதம், தவம் என்னும் சிறந்த லக்ஷியங்களை இக்காவியம் வலியுறுத்துகிறது. துறவறம் பூண்டோன் தாய் தந்தையரையும், மனைவி மக்களையும், உடன்பிறந்தோரையும் விட்டு உலக நன்மை ஒன்றிற்கே தன்னை அர்ப்பணம் செய்யவேண்டும் என்பதும் இதில் விளக்கப்படுகிறது.

பல அற்புதமான உருவகங்களும் உவமைகளும் இதில் அமைந்துள்ளன. மணிமேகலை பிக்குணியானுள் என் பதைக் கேட்டு மற்றையோர் 'அரும்பெறல் மாமணி பெருங்கடல் வீழ்த்ததுபோன்று' வருந்துவதும், உபவனத் தில் 'அந்தி என்னும் பசலைமெய்யாட்டி கணவனை இழந்து தமரகம் புகும் ஒரு மகள்போல' வருவதும், 'அந்திமாலை நீங்கிய பின்னர் வந்து தோன்றும் முழுமதி 'வெள்ளி வெண்குடத்துப் பால் சொரிவதுபோல்' நிலாச் சொரி வதும் அவற்றிற்கு உதாரணங்களாகும்.

இக்காவியத்தில் வரும் பெரும்பான்மையான சமய நுண்மைபற்றிய பகுதிகளை, 'அவை தத்துவசாஸ்திரிகளுக் கும் சரித்திரக்காரருக்கும், பண்டைநூல் ஆராய்ச்சியாளர் கும் மட்டுமே அவசியம். கதைப்போக்கிற்கு இன்றியமை யாதன அல்ல' என்ற காரணத்தினுல் இவ்வரலாற்றில் விடுத்துள்ளேன்.

இதில் உள்ள நயம் பல. இச் சுருக்கத்தில் அவற்றின் பெருமை அனைத்தையும் எடுத்துரைக்க இடம் இல்லை. ஆயினும் நம் முன்னோர், கங்கையைப் பார்த்திராதவர் களுக்குக் குடத்தில் கங்கைநீர் கொண்டுவந்து தருவது போல், இந்தப் பெருங்காவியத்தைப் படித்து அநுபவி யாதவருக்குச் சுருக்கமான இவ்வரலாற்றை அர்ப்பணம் செய்கிறேன். நம் கண்முன் ஒரு புதிய உலகம் தோன்றி வருகிறது. அதில் நம் பாரத தேசமும், தமிழ் நாடும் நூதன எழிலுடன் விளங்குகின்றன. நான் தொடுத்த இந்த எளிய மாலையைத் தமிழ்த்தாய், பாரதமாதா, உலக அன்னை ஆகிய மூவர் பாதத்திலும் சமர்ப்பிக்கிறேன்.

ஏ. எஸ். பி. ஐயர்.

4 - JUN 1955
MADRAS

# மணிமேகலை

## இந்திரவிழா வந்த காரணம்

பகைவர்களை வென்று அசுரரின் அழியா அரணையும் பொடியாக்கியபின் சோழ அரசனான தொடித் தோட் செம்பியன் அமைதியுடன் அரசு புரிந்து வந்தான். ஆயினும் நாட்டில் மழை பொழியாமல் பஞ்சம் ஏற்படவே மக்கள் வருந்தலாயினர். மன்னன் குலகுருவாகிய அகஸ்தியரைப் பொதிய மலையினின்று வரவழைத்துப் பஞ்சம் நீங்க, "அழியாத் தமிழ் மொழிபோல் என்றும் நிலைக்கும்படி ஓர் உபாயம் அருளவேண்டும், ஐயனே!" என்று வேண்டினான். அகஸ்தியர், "இந்திரனைப் போய்க் கண்டு, வருஷந்தோறும் மற்றத் தேவர்களுடன் இந்திரனைக்குறித்து விழா நடக்கும் 28 நாட்களும் தலை நகராகிய பூம்புகாரில் வந்து இருக்கும்படி அவனை வேண்டு. அவன் அதற்கு இசைந்தால் அந்த விழா சரிவர நடக்கும் வரையில் பஞ்சமோ பெருக்கோ உன் நாட்டில் ஏற்படாது. ஆனால் எக்காரணம் பற்றியேனும் விழாவுக்குத் தடை உண்டானால் கள்வரையும் பாவிகளையும் தண்டிக்கும் அங்காடிப் பூதம் நகரைவிட்டுப் போய்விடும். புகாரின் வளமைக்குக் காரணமான கடல்தெய்வமாகிய மணிமேகலா தெய்வமும் கோபங்கொண்டு கடலை ஏவி ஊரை அழித்துவிடும், ஜாக்கிரதை" என்று மொழிந்தார்.

அரசனும் அவர் சொல்லியபடியே இந்திரனிடம் சென்று அவனை வேண்டினான். இந்திரன் புன்முறுவல் கொண்டு, "குடமுனிவராகிய அகஸ்தியமகரிஷி சொன்னால் சொன்னதுதான். அதை மீறத் தேவர்களாலும் ஆகாது. அப்படியே வருவேன்" என்று அதற்குச் சம்மதித்தான். அதுமுதல் இந்திரவிழா வருஷந்தோறும் காவிரிப் பூம்பட்டினத்தில் விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. அதனால் சோழநாடும் மழைவளமும் பயிர்வளமும் பெற்ற நாடு என எங்கும் புகழ் பெற்றது. காந்தமன் என்னும் அரசனும் அகத்திய முனிவரும் தந்த காவிரியும், முத்தும் பளிங்கும் போன்ற தெள்ளிய நீர் கொண்டு புது மணப்பெண் புருஷன் வீடு செல்வதுபோல் கடலை நோக்கிச் சென்று சிறப்புற்றது.

## விழா வருதல்

இந்திரவிழா வருவதை அறிவிக்க வச்சிரக் கோட்டத்திலுள்ளமுரசைப்பட்டயானைமீது ஏற்றி முரசறைவோன் வீதிகள்தோறும் அதனை அடித்துக்கொண்டே, "பொன்னி வளநாடு வாழ்க! பூம்புகார் வாழ்க! மன்னர் எடுக்கும் விரதமும் ஓங்குக! வானமும் மாரி பொழிக! மூதூர் மக்களே! நம் அரசரும் அமைச்சரும் மந்திரச்சுற்றமும் வழக்கம்போல் இந்திர விழாக் கொண்டாடப் போகிறார்கள். ஆயிரங்கண் படைத்த இந்திரன்,தேவர் முனிவர் ஆகியவர்களுடன் விழாவைக் காண வருகிறான்! ஆகையால், வீதிகள் தோறும் பூரண கும்பமும், பொன்னால் ஆன பாலிகைகளும், பாவை விளக்கும் வைத்திருங்கள். வீதியிலும்

மன்றத்திலும் பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்புங்கள்! மாடங்களிலும் வாயிலிலும் வாழையும் கமுகும் குலையுடன் கட்டுங்கள். பூங்கொடிகளும் கரும்பும் நடுங்கள். பசும்பொன் தூண்களில் முத்துமாலையை முறையாகக் கட்டி வையுங்கள். நுதல்விழிக் கடவுள் முதலாக ஊரில்வாழும் சதுக்கத் தெய்வம் முடிய எல்லாக் கோயில்களையும் சுத்தம் செய்திடுங்கள்! புண்ணிய நல்லுரை கூறுவோர் பொதுமன்றங்களிலும், பட்டிமண்டபத்திலும் இருந்து போதனை புரியுங்கள். மணற்குன்றங்களிலும் பூந்துறைகளிலும் மற்ற இடங்களிலும் தேவரும் மக்களும் ஒத்து வாழும் இந்த விழாக் காலத்தில் பகைமையையும் சச்சரவையும் விட்டொழித்து நட்புக் கொண்டு விழாவைக் கொண்டாடுங்கள். பசியும் பிணியும் நீங்கி வளமும் அமைதியும் ஓங்குக!'' என்று வாழ்த்தினன். பட்டத்து யானையைத் தொடர்ந்து மற்ற யானைகளும் காலாட்படையும் குதிரைப்படையும் தேரும் வந்தன. நகரத்தாரும் சிறுவர்களும் முரசறைவோன் பின்னே வாழ்த்திய வண்ணம் சென்றார்கள்.

## மாதவியும் மணிமேகலையும் விழாவில் கலவாதிருத்தல்

வழக்கம்போல் இந்திர விழா ஆடம்பரமாக மறுநாள் தொடங்கியது. கோவலன் மதுரையில் அநியாயமாய்க் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்டதும் கண்ணகி பத்தினித் தெய்வமாகி விமானம் ஏறியதும் அன்று காலைதான் அவர்களுக்கு

எட்டின. அவர்கள் தாங்கவொண்ணுத் துயர்கொண்டு தங்கள் சொத்து முழுவதையும் ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்துவிட்டுப் பௌத்த சங்கத்தில் சேர்ந்துவிட்டார்கள். விழாவின்போது பொது மன்றத்தில் நகரவாசிகள் மனம் களிக்க முன்னெல்லாம் பாட்டிலும் கூத்திலும் ஈடுபட்ட அவர்கள் இம்முறை அதில் கலந்துகொள்ளவில்லை.

ஊரார் இதைக் குறித்துக் குறை கூற ஆரம்பிக்கவே, மாதவியின் தாயாகிய சித்திராபதி தன் மகள் மீது சினங்கொண்டாள்; மாதவியின் அருமைத் தோழியான வசந்தமாலையை • அழைத்து, "அவர்களிடம் போய், 'நீங்கள் இந்திர விழாவுக்கு வராததால் ஜனங்களுக்கு அதிருப்தியாய் இருக்கிறது" என்று சொல்லி வா. நம் குலவழக்கத்தை விட்டுப் பிக்ஷுணி யாவது நமக்குப் பொருந்தாது என்றும் சொல். அவர்களை உடனே வரும்படி நான் சொன்னதாகவும் கூறு. மணிமேகலையை இப்படிப் பாழ்பண்ண அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது' எப்படியாவது நீ அவர்களை இங்கே அழைத்துக்கொண்டு வந்தாகவேண்டும்" என்ருள் சித்திராபதி.

வசந்தமாலை உடனே புறப்பட்டு அவர்கள் இருந்த மலர்மண்டபத்திற்குச் சென்ருள். அங்கே மாதவியும் மணிமேகலையும் தவக்கோலம் பூண்டிருப்பதைக் கண்டு வருத்தமுற்றுச் சித்திராபதி கூறியதை அவர்களுக்கு எடுத்து உரைத்தாள். அதைக் கேட்டு மாதவி, "நீ மணிமேகலையின் இயல்பை அறியாமல் இப்படியெல்லாம் பேசுகிருய். கோவலன் மகளும் கற்புக்கரசியாகிய கண்ணகியின் புதல்வியுமாகிய மணிமேகலை அந்த இழிவான தொழிலை மேற்கொள்ளாதிருப்பது தகுதியே.

கணிகையர் வாழ்க்கை அவளைப் போன்றவருக்கு உகந்ததன்று. நான் என் அருமைக் காதலன் இறந்த வருத்தம் தாங்காமல் பௌத்தாசிரியராகிய அறவண அடிகளிடம் சென்று கதறி அழுதபோது அவர், 'இழி தொழில் நடத்துவதைக் காண வருந்துபவன் நான். நீ அதை விடுத்துத் தவ ஒழுக்கத்தை மேற்கொண்டது பற்றி எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. நிலையா இன்பம் நாடினால் அது துன்பத்தையே விளைவிக்கும். அந்தப் பற்றை அறுத்தெறிந்தால் பேரின்பம் உண்டாகும்' என்று கூறினர். பிறகு நால்வகை வாய்மைகளையும் அருளிச் செய்து என்னைப் பிக்ஷுணியாக ஏற்றார். பத்தினியாக இருந்திருந்தால் கண்ணகியைப் போல் கணவனைப் பின் தொடர்ந்திருப்பேன், அல்லது விதவையின் வெள்ளாடை உடுத்திருப்பேன். இனிமேல் கூத்தாட வரமாட்டேன் என்று சித்திராபதியிடம் போய்ச் சொல்லி அவள் கோபத்தையும் வருத்தத்தையும் ஆற்றி வா'' என்றாள். அதைக் கேட்ட வசந்தமாலையும் பெறுவதற்கரிய மாணிக்கத்தைக் கடலில் வீழ்த்தியவர்போல அவ்விடம் விட்டு நீங்கிச் சித்திராபதியிடம் சென்றாள்; நடந்ததையும் அவளுக்குத் தெரிவித்தாள்.

## மணிமேகலை உபவனம் செல்லுதல்

மணிமேகலை, தன் தந்தை கோவலனுக்கும் தாயான கண்ணகிக்கும் நேர்ந்த கதியை எண்ணி எண்ணி நாள்முழுவதும் கண்ணீர் சிந்தியவண்ணம் இருந்தாள். அவள் பூஜைக்காகத் தொடுத்துக்கொண்டிருந்த மாலை கண்ணீர்பட்டு நனைந்துவிடவே, மாதவி அவள் கண்களைத் துடைத்து இன்மொழிகள் கூறி;

அவளை ஆற்றுவித்தாள்; "கண்ணீர் பட்டதால் இப் பூமாலை அந்தி பூஜைக்கு உதவாது. நீ சோலைக்குப் போய்ப் புது மலர் பறித்து வா" என்றாள்.

மணிமேகலையும் அவ்வாறே சென்றுவர உடன் பட்டாள். அப்போது அவளுடைய பிராம்மணத்தோழி யும் பிக்ஷுணியுமான சுதமதி என்பவள், "உன்னைப் போன்ற இளம்பெண்கள் இத்தனை நாழிகைக்கு மேல் தனியே பூஞ்சோலைக்குச் செல்வது தகுதியன்று. அத னால் கெடுதல் ஏதாவது ஏற்படலாம். நான் தனியாகப் புறப்பட்டுப் போய்ப் பட்டது போதுமே! வடநாட்டி லுள்ள சம்பா நகரத்தில் வசித்து வந்த கௌசிகர் என்ற பிராம்மணரின் மகள் நான். ஒரு நாள் முன்பின் யோசியாமல் பயமின்றி நான் ஒரு பூந்தோட்டத் திற்கு மலர் கொய்யச் சென்றேன். அப்போது, இங்கே நடக்கும் இந்திர விழாவுக்கு ஆகாயமார்க்கமாகப் போய்க்கொண்டிருந்த மாருதவேகன் என்னும் வித்தி யாதரன் என்னைக் கண்டு மோகங்கொண்டு உடனே எடுத்துக்கொண்டு மேலே சென்றான். சில நாட்கள் என்னைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண் டிருந் தான். பிறகு என்னை இங்கே விட்டுவிட்டுப் போய்விட் டான். பெண்கள் தனியாகச் செல்லுவதால் இப்படித் துன்பப்பட நேரிடுகிறது. நானும் உன்னோடு வருகிறேன். இலவந்திகைச் சோலையில் அரசனும் அவன் சுற்றத் தாரும் இருப்பார்கள். ஆகையால், நாம் அங்கே போகக் கூடாது. உத்தியானவனமோ தெய்வங்கள் நடமாடுகிற இடம். அங்கே நம்மைப்போல மனிதர்கள் நுழைய முடியாது. அதிலுள்ள மலர்களைப் பூதங்கள் காத்து வருகின்றன; வண்டுகூட அவற்றை மொய்க்கத் துணி யாது. கவேர வனம், சம்பாதி வனம் ஆகிய இரண்டும்

தேவர்களால் காக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் உபவனம் என்று ஒரு பூஞ்சோலை இருக்கிறது. அங்கே அருளும் அன்பும் உடைய பகவானது ஆணையால் மலர் தரும் பல மரங்கள் உள்ளன. கடுமையான விரதங்களைக் கடைப்பிடிக்கும் முனிவர்கள் வாழும் இடம் அது. ஆகையால் அங்கே போனால் நமக்கு ஒரு தீங்கும் நேரிடாது. அவ்வனத்தில், தன்னுள்ளே இருப்போருடைய ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்கள் உருவங்களை மட்டும் புலனாக்கும் பளிங்கு மண்டபம் ஒன்று இருக்கிறது. அங்கே மாணிக்கம் இழைத்த பதுமபீடம் ஒன்று உண்டு. அப்பீடத்தில் இட்டால் அரும்புகளும் மலரும். அதில் இட்ட மலர்களோ என்றும் வாடாமல் அப்படியே இருக்கும். வண்டுகள் அவற்றை மொய்க்கத் துணியமாட்டா. அந்தப் பீடத்தின் பெருமையை அளவிட்டு உரைக்க முடியாது. மயன் என்ற அசுரத் தச்சனால் கட்டப்பட்டது அது. அதன் சோபையை வாயால் வருணிக்க முடியாது. நேரே போய்ப் பார்த்தால்தான் அது விளங்கும். அங்கே போனால் மணமுள்ள நல்ல மலர்களைப் பறித்து வரலாம்" என்று கூறி மணிமேகலையுடன் அவ்வுபவனத்துக்குப் புறப்பட்டாள்.

அவ்விருவரும் தெருவழியாகச் செல்லும்போது எங்கும் கொண்டாட்டமாகவே இருந்தது. நடுவழியில், குடிகாரன் ஒருவன், உண்ணாவிரதம் பூண்டு இளைத்திருக்கும் மற்றொருவனை நோக்கி, "இந்தக் கள்ளைக் கொஞ்சம் குடித்துப் பாரேன். உன் உடம்பு பருத்து நன்றாக ஆகிவிடும்; வாடிப் போன உடலில் வருந்திக்கொண்டிருக்கும் உன் உயிரும் அயர்வு நீங்கிச் சுகம் பெறும், அப்பா. இந்தா" என்று கூறிக்கொண்

டிருந்தான். வீதியில் ஓரே ஜனக்கூட்டம். இருபுறமு முள்ள மாளிகைகளில் வரையப்பட்டிருக்கும் சித்தி ரங்களைக் கண்டு சிலபேர் வியந்து நின்றார்கள். மணி மேகலையைப் பார்த்ததும் அவர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டு, "ஒப்பற்ற இந்த அழகியைத் தவ வழியில் புகுத்திய மாதவி மிகக் கொடியவள். பூக் கொய்ய இவள் சோலையில் நுழைந்தால் அங்கே இருக்கும் அன்னப் பட்சிகள் இம்மங்கையர்க்கரசியின் நடை யழகைக் கண்டு என்ன பாடுபடும் தெரியுமா!" என் றெல்லாம் பேசிக்கொண்டார்கள். மணிமேகலையும் சுதமதியும் அதைக் கேட்டவண்ணம் உபவனத்தை நோக்கி நடந்தார்கள்.

## உதயகுமரன் வருதல்

சோலையில் புகுந்ததும் அங்கே கணக்கற்ற விருக்ஷங்களும் பலவகை மலர்களும், சான்றோர் உள்ளம்போல் தெளிந்த நீரோடைகளும் இருப்பதைக் கண்டனர். எண்ணற்ற கொடிகளும் குற்றுச் செடி களும் அழகுடன் திகழ்ந்தன. இப்படி அவ்வுபவனத் தின் வளங்களையும் அழகையும் பார்த்தவண்ணம் அவர்கள் களிப்புடன் செல்லும்போது வெளியே ஆர வாரம் கேட்டது. காலவேகம் என்னும் பட்டத்து யானை மத வெறிகொண்டு வீதியில் ஜனங்களைத் துரத்தி அட்டகாசம் பண்ணித் திரிந்தது. இதைக் கேட்டதும் இளவரசனாகிய உதயகுமாரன் மாவுத்தர்களுடன் துரத்திச் சென்று உபவனத்துக்கு எதிரே அதை அடக்கிவிட்டான். பிறகு தேரில் ஏறி அரண்மனையை நோக்கி நாடகக் கணிகையர் வீதி

வழியாகச் சென்றுகொண்டிருந்தான். அங்கே ஒரு மாடத்தில் அவன் நண்பனாகிய எட்டிகுமரன் ஒரு கையால் யாழ் ஒன்றையும் மற்றொன்றால் தன் காதற் பரத்தையையும் தழுவிக்கொண்டு மயங்கிப் பதுமை போல் இருப்பதைக் கண்டான். உதயகுமரன் அவன் அப்படி இருப்பதன் காரணத்தை வினவ, அவ்வணிகனும், "அந்த அழகி மணிமேகலை பிக்ஷுணிக் கோலத்தில் இந்த வழியாகச் சுதமதியுடன் உபவனத்துக்குச் சென்றாள். அவள் தந்தை கோவலனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்த கதியை எண்ணி வருத்தமுற்றேன்" என்றான்.

உதயகுமரனுக்குப் பல நாளாக மணிமேகலையிடத்தில் விருப்பம் உண்டு. அவன் எட்டிகுமரனைப் பார்த்து, "நான் இப்போதே போய் அவளை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு உபவனத்தை நோக்கித் தேரைச் செலுத்தினான். அத் தேரொலியைக் கேட்டு மணிமேகலை சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்மேல் மோகங்கொண்டிருக்கிறான் என்று வசந்தமாலை என் தாயிடம் சொல்லக்கேட்டிருக்கிறேன். இது உதயகுமரன் தேரொலிபோல் இருக்கிறதே! நான் என்ன செய்வது? சொல்லேன்" என்றாள். அவளை அந்தப் பளிங்கு மண்டபத்தில் நுழைந்து தாழிட்டுக் கொள்ளும்படி சொல்லிச் சுதமதி சற்றுத் தூரத்தில் போய் நின்று கவனித்துக்கொண்டிருந்தாள்.

உதயகுமரன் உபவனத்தினுள் வந்தபோது சுதமதி மட்டும் அங்கே நிற்பதைக் கண்டான். "நீ ஏன் இங்கே தனியாக நிற்கிறாய்? மணிமேகலையுடன் நீ இங்கே வந்தாய் என்று சொன்னார்களே! அவள்

எங்கே? அவள் செவ்வாய் மீண்டும் முறுவல் பெற்றதோ? அவள் பௌத்த சங்கத்தார் இருப்பிடத்தைவிட்டு இந்தப் பூங்காவில் வந்தது நல்லதே'' என்றான். சுதமதிக்கு முதலில் இளவரசனிடம் பேச அச்சமாக இருந்தது. பின்பு அவள் துணிவுகொண்டு, "இளவரசே! இளமைப் பருவத்திலேயே முதியவன் வேஷம் தரித்து இருவர் வழக்கைக் கேட்டு அதினின்றே உண்மையை உணர்ந்த கரிகாலன் மரபைச் சேர்ந்த உனக்கு என்னைப்போன்ற மகளிர் தெரிவிக்கக் கடவதும் ஒன்று உண்டோ? ஆயினும், ஒன்று சொல்லுகிறேன்; கேள்: பூர்வஜன்ம வினையின் பலன் இந்த உடம்பு. தீமைக்கு உறைவிடம் இது. இதன் மேலுள்ள ஆடை ஆபரணங்களையும் போர்வையையும் களைந்தால் புலால் நாற்றமே வீசும். கொடுமை நிறைந்து பிணியின் இருப்பிடமாய் உள்ளது இந்த உடல். கோபதாபம் என்னும் விஷப்பாம்புகள் இதில் ஒளிந்துகொண் டிருக்கின்றன. இதில் துன்பமும் நீங்கா அவலமுமே அடங்கி உள்ளன. காமமே தீமைக்குக் காரணம். ஆகையால், மணிமேகலையின்மேல் உனக்குள்ள ஆசையை விட்டொழி'' என்றாள்.

ஆனால் உதயகுமரன் அதற்குச் செவி சாய்க்கவில்லை. பளிங்கறையினுள்ளே இருந்த மணிமேகலையின் உருவம் அவன் கண்களைக் கவர்ந்தது. அதனுள்ளே செல்ல வாயில் எங்கே இருக்கிறது என்று அறியச் சுவரைக் கையால் தடவிக்கொண்டே அதைச் சுற்றி வந்தான். "இதனுள் எப்படி நுழைவது? சொல்லேன்'' என்று சுதமதியைக் கேட்டான். அவள் அதைக் கூற மறுத்து, "மணிமேகலை தவ வாழ்க்கைக்கே உரியவள். சிறிதும் காம விகாரம் இல்லாதவள். நீ மேலும்

மேலும் அவளைத் துன்புறுத்தினால் உன்னைச் சபிக்கும் வன்மை உடையவள். ஆகையால், நீ பேசாமல், இவ் விடத்தைவிட்டுச் செல்வதே உத்தமம்'' என்றாள். ''அது கிடக்கட்டும். எப்படியும் நான் அவளை அடைந்தே தீருவேன். நாடகக்கணிகைக்கு விரதம் ஏது? ஜாதி உரிமை ஏது?'' என்றான் இளவரசன்.

''உன்னால் முடியாது. பார்'' என்றாள் சுதமதி.

''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்? உன்னை அந்த வித்தியாதரன் எடுத்துக்கொண்டு போக வில்லையா?—அது இருக்கட்டும். அவன் உன்னைச் சமணர்களிடையே விட்டுப் போனானே; நீ எப்படி அவர்களைவிட்டு நீங்கிப் பௌத்த சங்கத்தைச் சேர்ந்த மணிமேகலையுடன் வந்தாய்?'' என்றான் இளவரசன்.

## சுதமதியின் வரலாறு

''என் தந்தை என்னைப் பல இடங்களில் தேடிக் கொண்டே கடைசியாக இந்த ஊருக்கு வந்து சேர்ந் தார். இங்கே சமணரிடையே என்னைக் கண்டார். என் தாய் நான் சிறு குழந்தையாய் இருக்கும்போதே இறந்துவிட்டதால் ஒரே மகளான என்னை என் தந்தையே அன்புடன் வளர்த்து வந்தார்; ஆகையால் என்னை விட்டுப் பிரிந்திருக்க அவருக்கு மனம் வர வில்லை. அவர் வீடுகள்தோறும் பிச்சையெடுத்துப் பிழைத்து வந்தார். என்னையும் பார்க்க வருவார். ஒரு நாள் இளங் கன்று உடைய பசுவின் அருகில் அவர் போய்க்கொண் டிருக்கும்போது அது சினமுற்று அவரை முட்டி அவர் வயிற்றைக் கிழித்துவிட்டது.

குடல் வெளியில் வந்துவிட்டது. அதைக் கையில் பிடித்துக்கொண்டு அவர் சமணப் பள்ளிக்கு வந்து தம்மைப் பாதுகாக்கும்படி கேட்டார். அந்தக்கோரக் காட்சியைக் கண்டு வெருண்டு அவர்கள் அவரை உள்ளே விட மறுத்து என்னையும் வெளியே தள்ளி விட்டார்கள். அப்போது சங்கதருமர் என்னும் பௌத்த பிக்ஷு எங்களிடம் இரக்கங்கொண்டு எங்களைப் பௌத்தர் இருப்பிடத்தில் சேர்த்தார். ஆசையை வென்று உலகம் உய்ய வந்த புத்தபகவனின் அருமை பெருமைகளை எங்களுக்கு எடுத்துச் சொன்னார். என் தந்தையும் சாந்தி பெற்று மரணம் அடைந்தார். நான் புத்தரின் அருள் மொழிகளையும் செயல்களையும் தியானித்தபடி அங்கே இருந்து வருகிறேன்.—இளவரசே! மணிமேகலையின்மேல் உள்ள விருப்பத்தை ஒழி" என்று கூறி முடித்தாள் சுதமதி.

"அது ஒரு காலும் இல்லை. அவளைச் சித்திராபதியின் உதவியால் எப்படியாவது அடைந்தே தீருவேன்" என்று சொல்லிவிட்டு இளவரசன் அரண்மனையை நோக்கித் தேரைச் செலுத்தினான்.

அவன் போனதும் மணிமேகலை பளிங்கறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து, புறப்பட்டுச் செல்லும் அந்த ரதத்தை நோக்கியபடி சற்று நேரம் இருந்தாள். பிறகு சுதமதியைப் பார்த்து, "அன்பில்லாதவள் என்றும் தவ வாழ்க்கைக்குத் தகுதியற்றவள் என்றும் விலைமகள் என்றும் அவன் என்னை இகழ்ந்தபோதிலும் ஏனோ என் நெஞ்சம் அவனைத் தொடர்ந்து செல்லுகிறது? காதல் என்பது இது தானோ? அப்படியானால் அந்த ஆசை அற்றுவிடட்டும்" என்றாள்.

கணவனை இழந்து தனியாகப் பிறந்தகம் புகும் ஓர் இளம் பெண் போல் அந்தி நேரம் வந்தடைந்தது. அதே சமயம், வெள்ளி வெண்குடத்தில் பால் சொரிவது போல் அந்தப் பூம்பொழிலிடையே நிலவைப் பொழிந்தவண்ணம் சந்திரன் உதயமானான்.

## மணிமேகலா தெய்வம் தோன்றுதல்

திரைகடல் ஓடி வாணிகம் நடத்திவந்த கோவலனுடைய மூதாதையர் மணிமேகலாதெய்வத்தை வழிபட்டனர். அந்தத் தெய்வத்தின் பெயரைக் கோவலன் தன் மகளுக்கு இட்டான். தன்னை வழிபடுவோர்க்கு நன்மை செய்யும் அந்தத் தெய்வம் வேறு வடிவங்கொண்டு இப்போது உபவனத்தில் இறங்கிப் புத்தபகவனை, "புலவன், தீர்த்தன், புண்ணியன், உலகநோன்பின் உயர்ந்தோன், குற்றங் கெடுத்தோன், செற்றம் செறுத்தோன், காமனைக் கடந்தோன்' என்றெல்லாம் துதிக்கத் தொடங்கியது. பிறகு, அங்கே ஒன்றும் தோன்றாமல் நிற்கும் சுதமதியையும் மணிமேகலையையும் நோக்கி, அவர்கள் அவ்வாறிருப்பதன் காரணத்தை வினவியது. அவர்களும் நடந்ததை எடுத்து உரைத்தார்கள்; "இது முனிவர்களுடைய தபோவனமாதலால் இதில் தீங்கு செய்யக்கூடாது என்று உதயகுமரன் மணிமேகலையை ஒன்றும் பண்ணவில்லை. நீங்கள் வெளியே வீதி வழியாகச் சென்றால் இவளைத் துன்புறுத்தாமல் விடமாட்டான். நீங்கள் மதிலின் மேல்பக்கமாகவுள்ள சிறிய வாயில் வழியாகச் சக்கரவாளக் கோட்டம் என்னும் சுடுகாட்டுக் கோட்டத்துக்குச் செல்லுங்கள். அது முனிவர்கள் தவம் செய்யும் இடமாகையால் ஒரு

தீங்கும் நேராது" என்று கூறி, "எந்தவிதமான வாழ்வும் நிலைக்காது. செத்தபின் அந்தப் பிணத்தைக் கொளுத்தினால்தான் என்ன? புதைத்தால்தான் என்ன? மண்தாழியில் அடைத்தால்தான் என்ன? நரிகளும் பருந்துகளும் தின்றால்தான் என்ன? சாவுக்குத் தப்ப எவராலும் இயலாது" என்றது.

## தெய்வம் சுதமதிக்கு உரைத்தது

சுதமதி கண்ணயர்ந்து விட்டாள். அப்போது அந்தத் தெய்வம் தன் வித்தையால் மணிமேகலையை மயக்கி அவளைத் தழுவியெடுத்துக்கொண்டு தெற்கே முப்பது யோஜனை தூரத்தில் உள்ள கடல்சூழ்ந்த மணிபல்லவம் என்ற சிறுதீவுக்கு ஆகாயமார்க்கமாகச் சென்று, அங்கே வைத்துவிட்டுத் திரும்பியது. பிறகு அத் தெய்வம், 'விடிந்தால் மணிமேகலையை எப்படியாவது கொண்டு வந்துவிடுகிறேன்' என்று எண்ணிக் கொண்டு காமபரவசனாய்த் துன்பமுற்றுத் தூங்காமல் இருந்த உதயகுமரனிடம் சென்று, "மன்னவன் மகனே! நீ நிலை தவறுவது வேந்தருக்கு அழகல்ல; மணிமேகலையின்மேல் உனக்குள்ள ஆசையை விட்டு விடு" என்று கூறியது. அதற்குப் பின் உபவனத்தில் நித்திரையில் ஆழ்ந்திருந்த சுதமதியின் முன் தோன்றி, "மணிமேகலை தன் முந்திய பிறப்பையும் உன் பழம் பிறப்பையும் அறியவேண்டி நான் அவளை மணிபல்லவத்துக்கு எடுத்துக்கொண்டு போயிருக்கிறேன். அவள் சீக்கிரம் திரும்பி வருவாள். அவள் முன்போல் இராமல் மாறிவிட்டாலும் நீ அவளை அறிந்துகொள்ள முடியும். மாதவியிடம் சென்று மணிமேகலை சிறந்த பௌத்த

பிக்ஷுணியாவாள் என்று தெரிவி. அதோடு அவளை மாதவி பெற்றெடுத்தபோது நான் கனவில் அவளிடம் சென்று, 'காமனை அறவே வெல்லும் தவமகளைப் பெற்றாய்' என்று கூறியதையும் அவளுக்கு நினைவூட்டு'' என்றது.

சுதமதி நடுக்குற்று எழுந்து மணிமேகலையின் பிரிவினால் வருந்தினாள். பிறகு சிறுவாயில் ஒன்றின் வழியாகச் சக்கரவாளக் கோட்டத்தில் புகுந்து அங்கே ஒரு பக்கத்தில் இருந்தாள். அப்போது அவ்விடத்தில் ஒரு தூணிலே இருந்த பதுமை ஒன்று, 'நீ போன ஜன்மத்தில் வீரை என்ற ராஜகுமாரியாக இருந்தாய். உனக்குத் தமக்கையாகத் தாரை என்னும் பெயருடன் இருந்தாள் மாதவி. மணிமேகலைக்கு இலக்குமி என்று அந்தப் பிறவியில் பெயர்; அவள் உனக்குத் தங்கையாக இருந்தாள்'' என்றது. சுதமதி அன்று இரவுமுழுதும் நடுங்கியவண்ணம் அங்கே கழித்தாள். பொழுது விடிந்ததும் அவள் மாதவியிடம் சென்று நடந்ததைத் தெரிவித்தாள். அதைக் கேட்டு மாணிக்கத்தை இழந்த நாகம் போல் மாதவி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். சுதமதியும் மணிமேகலையை விட்டுப் பிரிந்ததால், உயிர் இழந்த உடல் போல் ஒன்றும் செய்யத் தோன்றாமல் கிடந்தாள்.

## மணிபல்லவத்தில் மணிமேகலை

இது இப்படியிருக்க அங்கே மணிபல்லவத்தில் மணிமேகலை துயில் கலைந்து எழுந்தாள். அவளுக்குத் தெரிந்த பொருள் ஒன்றும் அங்கே காணப்படாமல் புது இடமாக இருந்ததால் இவ்வுலகத்தைத் துறந்து

மறுவுலகத்தை அடைந்த உயிர் போல் திகைத்துப் போனாள். முதலில் அது உபவனத்தில் முன்னே கண்டறியாத ஒரு பாகமாக இருக்கும்; தன் தோழி அருகே எங்காவது ஒளிந்துகொண்டு இருப்பாள் என்று எண்ணி அவளைப் பெயரிட்டு அழைத்தவண்ணம் கடற்கரையை விட்டு எழுந்து மணல் மேட்டை நோக்கி ஓடினாள். எங்கே தேடியும் சுதமதியைக் காணவில்லை. இறந்து போன தன் தந்தையை எண்ணிக்கொண்டு, "ஐயா, அநியாயமாகக் கொலையுண்டாயே; கணவன் மாண்ட வருத்தம் தாங்காமல் நகரை எரித்துப் பத்தினித் தெய்வமாகிய கண்ணகித் தாயே! நான் இந்தத் தீவில் தன்னந்தனியே மாள்வதோ?" என்று அலறினாள்.

அப்போது அவள் எதிரே ஒரு புத்த பீடிகை தோன்றிற்று. உறவினர்களான இரண்டு நாக அரசர்களிடையே அந்தத் தீவை ஆளும் உரிமையைக் குறித்து பெருத்த சச்சரவு மூண்டபோது புத்தர் அந்தப் பீடிகையில் அமர்ந்து அவர்களுக்கு ஞானோபதேசம் செய்தருளினார். அதனைத் தரிசித்தவர்களுக்கு அது பழம் பிறப்பைத் தெரிவிக்கும் மகிமை பொருந்தியது. மணிமேகலையும் அதை நெருங்கியதும் தான் முன் பிறப்பில் இராகுலன் என்ற அரசனின் ராணியான இலக்குமி என்பதை அறிந்தாள்.

முன் பிறப்பில் பிரமதரும முனிவர் சொன்னதெல்லாம் அவள் நினைவுக்கு வந்தன. "அவந்தி நாட்டில் காயங்கரை என்னும் ஆற்றங்கரையில் பூருவ காந்தாரத்து அரசனை அத்திபதிக்கு நீ தருமோபதேசம் புரியும்போது நானும் என் கணவனுடன் வந்

திருந்தேன். அத்திபதியிடம் நீ அதற்கு முன், இடவயம் என்னும் அவனது தலைநகரமும் அதைச் சுற்றி நானூறு யோஜனைப் பரப்பும் பூகம்பத்தினால் அழுந்தி விடும் என்று கூறியிருந்தாய். அந்த அரசன் அதனால் தான் முன்னதாகவே தன் ராணிமாருடனும் குடிகளுடனும் அவந்திக்கு வந்துவிட்டான். நீ சொல்லிய படியே அன்று பூகம்பம் நேர்ந்தது. அவன் நாடு அழிந்தது. அப்போது என்னிடம் என் கணவன் ராகுலன் அன்றைக்குப் பதினாரும் நாள் திட்டிவிடம் என்னும் கொடிய விஷப்பாம்பு கடித்து இறந்துபோவான் என்றும் அவனோடு நானும் தீயிற் புகுந்து மாள்வேன் என்றும் கூறினாய்; பின்பு புகார் நகரத்தில் சென்று நான் பிறக்கப்போவதாகவும் அங்கே எனக்குத் தீங்கு நேரிடும் சமயத்தில் மணிமேகலாதெய்வம் வந்து என்னை மணிபல்லவத்தில் வைத்துவிட்டுப்போகும் என்றும் அங்குள்ள புத்தபீடிகையைக் கண்ட மாத்திரத்தில் பழைய நினைவு வரும் என்றும் நீ சொன்னாய். 'என் கணவன் எங்கே பிறப்பான்?' என்று நான் கேட்ட போது, 'மணிமேகலா தெய்வம் உனக்குத் தெரிவிக்கும்' என்றும் கூறியிருந்தாய்.'' இவ்வாறெல்லாம் சொல்லி, "அந்தத் தெய்வம் வரவில்லையே'' என்று மணிமேகலை ஏங்கும்போது மணிமேகலா தெய்வம் வானத்திலிருந்து இறங்கிவந்து புத்தபீடிகையைத் தொழுதது. பின்பு மணிமேகலையை நோக்கி, "உன் கணவன் இராகுலன்தான் உதயகுமரனாகப் பிறந்திருக்கிறான்'' என்றது.

"ஆ! அதனால்தான் அவன் என்னைச் சுற்றி அலைகிறான்; நெஞ்சும் அவனை நாடுகிறது!'' என்றாள் மணிமேகலை.

"ஆமாம். முன் பிறப்பில் நீ ஒருசமயம் அவனிடம் ஊடல் கொண்டிருந்தபோது அதைத் தீர்ப்பதற்கு அவன் உன் அடிகளை வணங்கினன். அப்படியும் உன் கோபம் தணியவில்லை. அவனைக் கவனியாமல் இருந்தாய். அந்தச் சமயம் சாது சக்கரன் என்ற பௌத்த சாரணன் ஆகாயமார்க்கமாக வந்துகொண் டிருந்தான். நீ உடனே துணுக்குற்று வெட்கி எழுந்துநின்று அச் சாரணனை வணங்கினய். உன் கணவன், 'அவன் யார்?' என்று கோபத்துடன் கேட்டான். நீ இராகுலன் வாயைப் பொத்தி, 'நாம் வணங்கவேண்டிய பெரியார் இவர்; ஆத்திரப்பட்டுப் பேசாதே' என்ருய். பிறகு அவன் அந்தச் சாரணனை வணங்கி அங்கேயே உன் விருப்பப்படி அமுது செய்தருளும்படி வேண்டினன், சாரணனும் அதற்கு இசைந்தான். அந்த மகானை உபசரித்ததன் பலனாக இப்போது உனக்கு ஓர் அதிசய ஓடு கிடைக்கப்போகிறது" என்றது.

## தெய்வம் தந்த வரங்கள்

பின்னர் அத் தெய்வம் மணிமேகலைக்கு மூன்று மந்திரங்களை உபதேசித்தது. ஒன்று, ஆகாயமார்க்கமாய்ச் சஞ்சரிப்பதற்கும், மற்ருென்று நினைத்த உருவம் கொள்வதற்கும், இன்னும் ஒன்று பசி தாகத்தைத் தணிப்பதற்கும் பயன்படும் மந்திரம். "உதயகுமரனிடமிருந்து நீ தப்பவே உன்னை இங்கே எடுத்து வந்தேன். இந்தப் பிறவியில் நீ புத்தபகவனது அருள் மொழிகளைக் கடைப்பிடிக்கும் சிறந்த பௌத்த பிக்ஷுணியாகப் போகிருய். அதற்கு முன் மற்றச் சமய நுண்மைகளை நீ அறிந்துகொள்ளவேண்டியது

அவசியமாகும். இந்தப் பெண்ணுருவில் சென்றால் சமயவாதிகள் அவைகளை உனக்குத் தெரிவிக்கமாட்டார்கள். இதனால்தான் வேறு வடிவங் கொள்ளும் மந்திரம் அவசியமாயிருக்கிறது. காலதாமதம் ஆகாமல் தூர தேசங்களுக்குப் போய் அந்த உண்மைகளை நீ அறிய ஆகாயவழியாகச் சஞ்சரிக்கும் மந்திரம் உபயோகப்படுகிறது. வேளைக்கு ஆகாரம் கிடைக்காவிட்டால் உபதேசங்களைக் கேட்கும்போது புத்தி ஒரு நிலையில் இராது; ஆகவே, பசியைப் போக்கும் மந்திரம் வேண்டியிருக்கிறது" என்றது அந்தத் தெய்வம்.

## ஆபுத்திரனின் அமுதசுரபி

இவ்வாறு மொழிந்துவிட்டு மணிமேகலா தெய்வம் மறைந்தது. பிறகு மணிமேகலை நிகழ்ந்தவற்றை எண்ணி வியந்தபடி அந்தத் தீவில் உலாவி வரும்போது, தீவதிலகை என்ற தேவமாது அவளெதிரில் தோன்றினாள். தீவதிலகை மணிமேகலைக்கு ஆபுத்திரன் என்ற மகானின் பிச்சைப் பாத்திரமாகிய அமுதசுரபியைப் பற்றித் தெரிவித்தாள். "இன்று புத்தபகவனது பிறந்த நாளாகையால் புத்தபீடிகையின் எதிரில் உள்ள தாமரைப் பொய்கையில் அந்தப் பாத்திரம் தோன்றும். அதில் இடப்பட்ட அன்னம் எடுக்க எடுக்கக் குறையாமல் மேலும் மேலும் வளர்ந்துகொண்டேயிருக்கும். இப்போது அந்தப் பாத்திரம் உன் கையில் வருமென்று நினைக்கிறேன். அதைக்கொண்டு நீ பொல்லாத பசிப்பிணியைத் தீர்ப்பாய். 'பசிப்பிணி என்னும் பாவி குடிப்பிறப்பழிக்கும்; விழுப்பங்கொல்லும்; பிடித்த கல்விப் பெரும்புணை விடும்; நாண் அணி களையும்;

மாண் எழில் சிதைக்கும்; புறங்கடை நிறுத்தும்.' முன் ஒரு காலத்தில் பஞ்சம் உண்டானபோது பசியால் வருந்தின கௌசிக முனிவர் அதைத் தணித்துக் கொள்வதற்கு நாய் இறைச்சியைத் தின்னப்போனார். அதைக் கண்டு இந்திரன் வெட்கி மழை பொழிய வைத்தான். ஆகையால் பசித்தவருக்குப் பிடி அன்னம் கொடுப்பதே சிறந்த தருமமாகும். உண்டு களித்தவருக்கு அவ்வாறு அளிப்பது தகாத செயலாகும். முன்னே சாதுசக்கரனை உபசரித்ததன் பலனாக இதோ உனக்கு இந்த அமுதசுரபி கிடைக்கிறது. இனிமேல் காவிரிப்பூம்பட்டினம் சென்று அங்கேயும் மற்ற இடங்களிலும் உள்ள எளியவருக்கு அன்னம் இட்டு வாழ்ந்து வா" என்று அருளினாள்.

மணிமேகலை தீவதிலகையுடன் கோமுகிப் பொய்கையை நெருங்கினாள். அப்போது அந்த அமுதசுரபியும் மேலே மிதந்து வந்தது. அதைக்கண்டு அதிசயித்த மணிமேகலை மிக்க நன்றியுடன் அதைக் கையில் ஏற்றாள்.

"இது எப்படி இங்கே வந்தது?" என்று மணிமேகலை தீவதிலகையைக் கேட்டபோது அத்தெய்வ மாது, "பின்னால் அறவண அடிகள் அதைப்பற்றி உனக்குச் சொல்லுவார். போய் வருகிறாயா?" என்றாள்.

மணிமேகலை தீவதிலகையை வணங்கி அவளிடம் விடை பெற்றுக்கொண்டு மந்திரத்தின் உதவியால் காவிரிப்பூம்பட்டினத்துக்குப் பறந்து சென்றாள். அங்கே தன் தாயையும் சுதமதியையும் கண்டு தன் பழம் பிறப்பையும் உதயகுமரனின் முன்பிறப்பு வரலாற்றையும் அவர்களுக்கு எடுத்துரைத்தாள்.

அதைக் கேட்டு அவர்கள் அதிசயமுற்றார்கள். பின்னர் அவர்கள் மூவரும் அறவண அடிகளைத் தரிசித்து வரச் சென்றார்கள்.

## ஆபுத்திரன் வரலாறு

மணிமேகலை தன் தாயுடனும் சுதாமதியுடனும் அறவண அடிகளை வணங்கியபின் அம்முனிவர் அவளை நோக்கி, "நீ கொண்டுவந்த இந்த அதிசய ஓடு ஒரு காலத்தில் ஆபுத்திரனுடையது. வாராணசி என்னும் ஊரில் அபஞ்சிகன் என்னும் ஒரு பிராம்மணன் இருந்தான். அவன் மனைவி சாலி என்பவள் நெறி பிசகி நடந்த பாவத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுத் தான் கர்ப்பிணியாக இருக்கும்போதே கன்னியாகுமரிக்கு நீராடச் சென்றாள். பாண்டியன் தலைநகராகிய கொற்கைக்கு அருகில் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதை ஒரு வாழைத் தோட்டத்தில் விட்டுவிட்டுப் போய்விட்டாள். குழந்தையின் அழுகையோசையைக் கேட்டு ஒரு பசு வந்து அதை நக்கிக் கொடுத்து அதற்குப் பால் ஊட்டியது. அதனால் தான் ஆபுத்திரன் என்று அந்தக் குழந்தைக்குப் பெயர் வந்தது. இப்படி இருக்கும்போது அருகிலுள்ள வயனங்கோடு என்னும் ஊரைச் சேர்ந்த பூதி என்னும் பிராம்மணன் அந்த வழியாகத் தன் மனைவியுடன் போய்க்கொண்டிருந்தான். குழந்தை குட்டியில்லாதவர்கள் அவர்கள். ஆகையால் அந்த அநாதைக் குழந்தையைக் கண்டதும் அவன் மகிழ்ச்சியுடன் அதை எடுத்துத் தன் மனைவியிடம் கொடுத்தான். ஊருக்குக் கொண்டுபோய் அதைத் தங்கள் குழந்தையாகவே

பாவித்து வளர்த்தார்கள். உரிய காலத்தில் அவனுக்கு கல்வி கற்பித்து உபநயனமும் செய்துவைத்தார்கள்,

ஒருநாள் அந்த ஊரிலுள்ள ஒரு பிராம்மணன் கோமேதயாகம் செய்ய வேண்டிப் பசு ஒன்றை மறு நாள் விடியற்காலை பலியிடத் தயாராக வாயிலில் கட்டி வைத்திருந்தான். பசுவைப் பலியிடுவது ஆபுத்திர னுக்குப் பொறுக்கவில்லை. அவன் அதை எப்படி யாவது நிறுத்துவது என்று தீர்மானித்தான். அன்று இரவு எவருக்கும் தெரியாமல் பசு கட்டியிருந்த கயிற்றை அறுத்து அதை ஆபுத்திரன் அழைத்துக் கொண்டு போய்விட்டான். அவன் போன சற்றுநேரத் துக்கெல்லாம் பிராம்மணன் வந்து பார்க்க அங்கே பசு இராததைக் கண்டு கூச்சலிட்டான். பிராம்மணர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள். பசுவின் அடிச்சுவட் டையும் ஆபுத்திரன் காலடி அடையாளத்தையும் கண்டு அவைகளைப் பின்பற்றிச் சென்றார்கள். கடைசி யாக ஆபுத்திரனைப் பசுவுடன் கையும் பிடியுமாகப் பிடித்துவிட்டார்கள். ஆபுத்திரனை அடிக்கத் தொடங் கினார்கள். யாகத்தை நடத்திவைக்கும் உபாத்தியா யன் பசுவைப் பிடிக்கப் போனான். ஆனால் அது அவனை வயிற்றில் முட்டவே அவனது குடல் வெளி வந்துவிட்டது. அதை அமுத்திக்கொண்டே அவன், 'ஆபுத்திரனைக் கொல்லுங்கள். புடையுங்கள்' என்று கூவினான். அதற்குள் பசு தப்பி ஓடிவிட்டது. பிராம் மணர்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு ஆபுத்திரனை ஈவிரக்கமில்லாமல் புடைத்தார்கள். "நீ பசுமகனடா, அதைக் காப்பாற்றுவதற்கு?" என்றார்கள். அவன், "பால் கொடுத்து உலகத்தையே காக்கும் வாயில்லா ஜீவனை பலியிடுவது தகாது" என்று வாதித்தான்.

அவர்கள் வேதத்தில் அதற்குப் பிரமாணம் இருப்ப தாக எடுத்துக் காட்டினார்கள். ஆபுத்திரன் வேதத் தைக் கண்டனம் செய்தான். அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைக்கும்போது. அவர்களுள் சாலியின் வரலாற்றை அறிந்த ஒருவன், "அவன் வேதத்தைத் திட்டுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை" என்று சொல்லி ஆபுத்திரன் பிறந்த விதத்தைக் கூறினான். ஆபுத்திரனை வளர்த்த பூதியும் அவனைப் பிரஷ்டன் என்று ஊரைவிட்டுத் துரத்தி விட்டான். அந்தப் பக்கத்தில் பிச்சை எடுத்தும் எவரும் ஆபுத்திரனுக்குப் பிடி அரிசிகூடப் போட வில்லை. ஆகையால் அவன் மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றான். அங்கே சிந்தாதேவியின் கோயில்முன் உள்ள அம்பலத்தில் தங்கி, வீதிதோறும் பிச்சை எடுத்து வந்தான். அப்படி வாங்கிவந்த உணவைக் காணார், கேளார், கால் முடம்பட்டோர், பேணுபவர் இல்லோர், பிணி நடுக்குற்றோர், எல்லோருக்கும் முதலில் அளித்து விட்டுப் பின்னால் தான் உண்ணுவான். ஒருநாள் இரவு அவன் தூங்கிக்கொண்டிருந்தபோது பசியினால் வருந்தும் சிலர், அவனை எழுப்பி உணவு அளிக்கும்படி வேண்டினார்கள். அவனிடத்தில் அப்போது ஒன்றும் இல்லை. வருத்தமுற்றுச் சிந்தாதேவியைப் பிரார்த் தித்தான். அப்போது அவள் தோன்றி அமுதசுரபி என்ற அக்ஷயபாத்திரம் ஒன்றைக் கொடுத்து, "இதில் இட்ட உணவு எத்தனை பேருக்குக் கொடுத்தாலும் குறையாமல் வளர்ந்துகொண்டேயிருக்கும்" என்று அருளி மறைந்தாள். ஆபுத்திரன் அந்த ஓட்டை எடுத்துக்கொண்டு போய் யாசித்து வந்து, பசித்து வந்தவர்க்கெல்லாம் அன்னம் இட்டான். தினந்

தோறும் இப்படி ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு உணவு அளித்து வந்தான். அவன் புகழ் பூலோகத்தில் மட்டுமின்றித் தேவலோகத்திலும் பரவியது. இந்திரன் ஆபுத்திரன் தன்மையை மெச்சி அவனுக்கு வரங்கொடுக்க ஒரு கிழப்பிராம்மணன் வடிவில் அவன் எதிரே தோன்றினன். 'எந்த வரம் வேண்டுமானுலும் கேள்; தருகிறேன்'' என்ருன் இந்திரன். ஆபுத்திரன் இடி இடி என்று வெகு நேரம் நகைத்து, "எனக்கு வரம் எதற்கு? ஏழைகள் பசியைத் தீர்க்க இந்த ஓடு ஒன்றே எனக்குப் போதும்'' என்ருன். தன்னை ஆபுத்திரன் இப்படி மதிக்காது பேசவே இந்திரனுக்குக் கோபம் வந்துவிட்டது. அந்த நாட்டிலேயே எவரும் பசியால் வருந்தாதிருக்கும்படி எங்கும் மழை பொழியச் செய்தான். அதனுல் ஆபுத்திரனிடம் பிச்சை ஏற்க எவரும் வருவதில்லை. ஆபுத்திரன் வெறுப்புற்ருன். அப்போது சில பிரயாணிகளிடமிருந்து, சாவக நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டு அநேக ஜனங்கள் மடிந்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டான். உடனே ஒரு கப்பலில் அந்த நாட்டுக்குச் செல்லப் புறப்பட்டான். மணிபல்லவத்தில் கப்பல் தங்கும்போது எல்லோரும் இறங்கினுர்கள்; அவனும் இறங்கினுன். ஆனுல் காற்ருேட்டம் சௌகரியமாக இருந்ததால் குறித்த நேரத்துக்கு முன்னமே கப்பல் ஆபுத்திரனின்றிப் புறப்பட்டுவிட்டது. ஆபுத்திரன் தன்னந் தனியே அங்கே வாழ வேண்டியிருப்பதற்கு உள்ளம் வருந்தினுன். பிறகு அந்த ஓட்டை அங்குள்ள கோமுகிப் பொய்கையில் எறிந்துவிட்டு, 'ஏழைகளுக்கு அன்னம் இட விரும்புவோர் கையில் சேருவாயாக' என்று சொல்லிப் பட்டினி கிடந்து உயிர் துறந்தான்.

இப்போது அது உன் கைக்கு வந்துவிட்டது. நீ போய் முதலில் தகுந்தவர் கையில் பிச்சை ஏற்று ஏழைகளுக்கு உணவு அளித்து வா" என்று கூறிமுடித்தார்.

## புகார் வீதியில் மணிமேகலை

மணிமேகலை அறவண அடிகளை வணங்கிவிட்டுப் பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்தி வீதியை அடைந்தாள். அவள் வெளியே வந்ததும், உஜ்ஜயினி அரசனாகிய பிரச்சோதனன் உதயணனை ஏமாற்றிச் சிறைப்படுத்தியபோது அவனை மீட்பதற்கு மாறு வேஷம் பூண்டு அங்கே வந்த அவன் மந்திரி யௌகந்த ராயணனை ஊரார் சூழ்ந்துகொண்டது போல, புகார் நகரத்து ஜனங்களும் மணிமேகலையைச் சுற்றிக் கூடி விட்டார்கள். இளவரசனது அன்புக்குப் பாத்திரமாகிய அவள் இப்படிப் பிச்சைப் பாத்திரத்துடன் பிக்ஷுணிக் கோலத்தில் வருவதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். காயசண்டிகை என்ற வித்தியாதரப் பெண்மணியும் அந்தக் கூட்டத்தில் இருந்தாள். அவள் மணிமேகலையிடம், "நான் யானைத் தீ என்னும் தீராப் பசிப்பிணியால் பன்னிரண்டு வருஷகாலமாக வருந்தி வருகிறேன். என் ஆறாப் பசியை இது ஆற்றுமோ?" என்றாள்.

"நிச்சயமாக ஆற்றும். இந்த ஓடு வாங்குவோர் கை வருந்தும்படி ஓயாமல் சுரந்துகொண்டிருக்கும்" என்றாள் மணிமேகலை.

அப்படியானால் என் வாழ்வைக் குலைக்க வந்த இந்தப் பசி வருத்தமும் நீங்கும் என்று நம்புகிறேன்" என்றாள் காயசண்டிகை.

அப்போது மணிமேகலை, "கற்புடைய பெண்கள் இடும் பிச்சையை முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்றாள்.

## சாதுவனும் ஆதிரையும்

"அதற்கென்ன! இதோ எதிரே தெரிகிறதே, அந்த வீட்டில் கற்புடைய பெண்களில் மிகச் சிறந்தவளாகிய ஆதிரை என்பவள் இனிது இல்லறம் நடத்தி வாழ்ந்து வருகிறாள். அவள் கணவனான சாதுவன் என்பவன் பெரிய வணிகன். 'அவன் ஒரு வேசியின் மேல் மோகங்கொண்டு பொருளையெல்லாம் இழந்தான். பிறகு அந்த வேசி அவனைத்துரத்திவிட்டு வேறொருவனைக் காதலனாகக்கொண்டாள். சாதுவன் வறுமையுற்று அவமானமடைந்து வீடு வந்து சேர்ந்தான். ஆனாலும் அவன் மனைவி பழையபடியே சிறிதும் அன்பு குறையாதபடி அவனை உபசரித்தாள். போன பொருளை மீட்டு, மனைவியிடம் தனக்குள்ள கடமையைச் செலுத்த எண்ணிச் சாதுவன் சில வணிகருடன் ஒரு கப்பலில் அயல்நாடு சென்றான். திரும்பி வரும் போது அவன் கப்பல் கவிழ்ந்துவிட்டது. அதில் தப்பிய சிலர், நடந்ததை இங்கு வந்து தெரிவித்தார்கள். மற்றவர்கள் இறந்து போய்விட்டார்கள் என்று அவர்கள் எண்ணி அவ்வாறே தெரிவித்துவிட்டார்கள். ஆதிரை தீ மூட்டி அதில் புகுந்தாள்; ஆனால் அது அவளைத் தீண்டக்கூட இல்லை. அப்போது ஆகாயவாணி ஒன்று, 'அதை விட்டு இறங்கு. நீ சிறந்த பதிவிரதையானதால் உன் கணவன் இறக்கவில்லை. அவன் திரும்பி வருவான்' என்றது. அப்படியே அவ

னும் வந்து சேர்ந்தான். உடைந்த கப்பலினின்று நழு விய மரத்துண்டு ஒன்றைப் பிடித்துக்கொண்டு அவன் நாகர் வாழும் தீவு ஒன்றில் கரையேறினன். அங்கே நக்க சாரணர் என்ற கொடிய ஜாதியார் அவனைத் தின்ன வந்தார்கள். ஆனால் அவனுக்கு அவர்கள் பாஷை தெரியு மாகையால், 'என்னைக் கொன்றாலும் கொல்லுங்கள்; உண்ணவேண்டாம். அது மகாபாவம்' என்று கேட்டுக் கொண்டான். அவர்களுடைய தலைவன் அவனைக் கொல்லாமல், 'இவனுக்கு வேண்டிய அளவு கள்ளை யும் மாமிசத்தையும் கொடுத்து இளம்பெண் ஒருத்தி யையும் கொண்டு வந்து விடுங்கள்' என்று கட்டளை யிட்டான். சாதுவன் தனக்கு அவை வேண்டியய தில்லை என்று மறுத்து, 'ஒன்றின் உயிரைக் கொன்று நான் இந்த நிலைக்காத உடலைக் காப்பாற்றுவானேன்? இயல்பாகவே காமமும் குரோதமும் கொண்டிருக்கும் நான் இந்தக் கள்ளைக் குடித்துவிட்டு ஏன் பின்னும் மயங்கவேண்டும்? அன்புடைய மனைவி இருக்க, தாசி களின் வலையில் சிக்கி அவர்கள் தன்மையை அறிந்த எனக்கு இந்த இளநங்கை எதற்காக? உண் ணத் தூய உணவும் குடிக்கத் தெளிந்த நீரும் நல்ல வர் சகவாசமும் இருந்தால்போதும்'' என்றான். இதைக் கேட்டு அந்த நாகர் தலைவன் மகிழ்வுடன் அவனுக்கு அவற்றைக் கொடுத்தான். பிறகு, 'இறைச்சியையும் கள்ளையும் இளம்பெண்களையும் எங்களால் விட முடி யாதே. எங்கள் தகுதிக்கேற்ப நாங்கள் முன்னேற ஏதாவது ஓர் உபாயம் சொல்' என்றான். சாதுவன், 'நரமாமிசம் உண்ணாதீர்கள். கடலில் கலம் கவிழ்ந்து தப்பியவர்களைக் கொல்லவேண்டாம். அவர்களுக்கு ஏதாவது உதவி புரியுங்கள். இந்தச் சிறு நன்மை செய்

தால் இறந்தபின் நல்ல கதி அடையலாம்!' என்றான். 'இறந்தபின் உயிர் வேறிடம் செல்லுகிறது என்பதற்கு ஆதாரம் ஏது?' என்று நாகர் தலைவன் கேட்டான். அதற்குச் சாதுவன், 'உயிருடன் இருக்கையில் சுகதுக்கங்களை அநுபவிக்க முடிகிறது. இறந்ததும் அது முடிவதில்லை. நம் உடல் நெருப்புப்பற்றி எரியும்போது கூட நாம் அதை உணருவதில்லை. இதிலிருந்தே ஆத்மா என்று ஒன்று இருக்கிறது என்று தெரியவில்லையா? அது உடலை விட்டு நீங்கி வேறு எங்கோ போயிருக்கவேண்டும் என்பதும் தானாகவே விளங்கும். ஆகையால் நாம் இம்மையில் செய்யும் வினையின் பயனை மறுமையில் அடைந்தே தீருவோம்' என்றான். நாகர் தலைவனுக்கும் அது உண்மை என்று பட்டது. சாதுவன் சொன்னபடி இனிமேல் நடந்துகொள்வதாக நாகர் தலைவனும் நக்கசாரணர்களும் உறுதி கொண்டார்கள். அப்போது அந்த வழியாகச் சந்திரதத்தன் என்னும் வியாபாரியின் மரக்கலம் சென்று கொண்டிருந்தது. நாகர்களின் கொடுமைக்கு அஞ்சி எவரும் அந்தத் தீவை நெருங்குவதில்லை. ஆனால் சாதுவன் நாகர்கள் இப்போது மாறிவிட்டார்கள் என்று தெரிவித்துச் சைகை செய்யவே, சந்திரதத்தன் அவ்விடத்தை அடைந்தான். நாகர்தலைவன் சாதுவனுக்குப் பழைய கொள்ளைப்பொருளிலிருந்து நிறையப் பொன்னும், சந்தனமும் அகிலும் பட்டு வெண்துகிலும் தந்து உதவினான். சாதுவனும் அவற்றைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்து சேர்ந்தான். கற்புக்கரசியே! நீ செய்த புண்ணியத்தின் பலனாகத்தான் நான் பெரிய கண்டத்தினின்று மீண்டேன்' என்று ஆதிரையைப்போற்றி அதுமுதல் அவளுடன்

சுகமாக வாழ்ந்து வருகிறான். வா, ஆதிரையின் வீட்டுக்குப் போகலாம்'' என்றாள் காயசண்டிகை.

மணிமேகலை அந்த வீட்டில் நுழைந்து பாத்திரத்தைக் கையில் ஏந்தி நின்றாள். ஆதிரை சிரித்த முகத்துடன் அவளை வலம் வந்து வணங்கி, "பசிப்பிணி நீங்கி எல்லோரும் சுகமாக வாழட்டும்'' என்று சொல்லி அமுதசுரபியில் அன்னம் இட்டாள். மணிமேகலை அதைக்கொண்டு அருகிலிருந்த ஏழைகளின் பசியைப் போக்கினாள்.

## காயசண்டிகையின் பசிநோய் நீங்குதல்

எடுக்க எடுக்கக் குறையாமல் அன்னம் வளருவதைக் கண்ட காயசண்டிகை அதிசயமுற்று, ''அம்மா! என் தீராப் பசியை இது தீர்க்குமோ? வானரப் படைகள் இலங்கைக்கு அணைகட்டச் சமுத்திரத்தில் மலைமலையாகக் கல்லைப் போட்டுத் தூர்த்தமாதிரி எவ்வளவு தான் சாப்பிட்டும் என் வயிறு நிறைந்தபாடில்லை'' என்றாள் மணிமேகலையை நோக்கி.

''கையை நீட்டு. இது ஓயாமல் சுரக்கும் அக்ஷய பாத்திரம்'' என்றாள் மணிமேகலை.

காயசண்டிகையும் கையை நீட்டினாள். அமுதசுரபியிலிருந்து அவள் கையில் இடைவிடாமல் அன்னம் சொரிய ஆரம்பித்தது. அதை அவள் ஆவலுடன் வயிறு வெடிக்க உண்டாள். பாலைவனத்தில் மறைந்த நீரோடை என்னும்படி முதலில் அவள் எவ்வளவுதின்றும் அவள் பசி தணியாதுபோல் தோன்றியது. ஆனால் காயசண்டிகை முடிவில், ''போதும்!

போதும்! என் வெம்பசி தீர்ந்தது. சாபமும் நீங்கியது'' என்றாள்.

''என்ன சாபம் அது? நீ யார்? ஏன் உனக்கு இந்த நோய் வந்தது?'' என்று மணிமேகலை வினவினாள்.

## காயசண்டிகையின் வரலாறு

''என் பெயர் காயசண்டிகை. நான் காஞ்சனன் என்ற ஒரு வித்தியாதரன் மனைவி. நாங்கள் வடக்கே கைலாயமலையிலுள்ள காஞ்சன்புரத்தில் இருப்பவர்கள். தெற்கே தாமிரபர்ணி உற்பத்தியாகும் இடத்திலுள்ள பொதியில் மலையின் வளத்தைக் கண்டுவரப் புறப்பட்டோம். வழியில் அழகிய காட்டாறு ஒன்றின் கரையில் எங்களுக்குள் ஊடல் ஏற்பட்டது. அங்கே ஒரு தேக்கிலையில் விருச்சிகர் என்ற முனிவர் பனம் பழத்தின் அளவு பருத்த நாவற்கனி ஒன்றை வைத்துவிட்டுக் குளிக்கப் போயிருந்தார்; பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு முறை ஒரு கனி தரும் தெய்விகமான நாவல் மரம் அது. அவரும் அத்தனை வருஷ காலம் பட்டினி விரதம் இருந்து அதைத் தின்பது வழக்கம். எனக்கு அது தெரியாது; கால் தவறி அதை நசுக்கிவிட்டேன். சற்று நேரத்துக்கெல்லாம் திரும்பிவந்த விருச்சிகர் அதைப் பார்த்து வருந்தி என்மேல் கோபங்கொண்டு, பன்னிரண்டு வருஷம் பட்டினி கிடந்து நான் உண்ணும் அருமையான உணவை, பறக்கத் தெரிந்தும் இப்படி நீ காலால் பாழ்பண்ணியிருக்கிறாய். நீயும் பன்னிரண்டு வருஷ காலம் பசியடங்காமலும் ஆகாயமார்க்கமாகச்செல்லும்

மந்திரத்தை மறந்தும் அலையக்கடவாய்' என்று சபித்து விட்டுப் போய்விட்டார். உடனே பசி வயிற்றைப் பிடுங்க ஆரம்பித்துவிட்டது. என்னால் எழுந்து பறக்கவும் முடியவில்லை. என் கணவன் என்மேல் இரக்கங் கொண்டு காடு முழுவதும் திரிந்து குவியல் குவியலாக் கனிகளும் கிழங்குகளும் கொண்டுவந்து கொடுத்தான். அப்படியும் என் பசி தீர்ந்தபாடில்லை. பிறகு அவன் என்னைக் காவிரியின் கரையில் இருக்கும் இந்தப் புகார் நகரத்துக்குப் புறப்பட்டுப் போகச் சொன்னான். 'தென்னாட்டுக் களஞ்சியம் அது. ஜம்பூத்வீபத்திலேயே தானதருமங்களுக்குப் பெயர் போன இடம் அது. அங்கே உன் பசிப்பிணி அடங்க எங்கே வேண்டுமானாலும் சோறு கிடைக்கும். அங்கு வருஷந் தோறும் இந்திர விழா நடக்கும் சமயத்தில் நான் உன்னை வந்து பார்க்கிறேன்'' என்றும் தெரிவித்தான். அப்படியே நானும் இங்கே வந்து இந்தப் பன்னிரண்டு வருஷமாகப் பிச்சை வாங்கி என் கொடும் பசியைப் போக்க முயன்றேன். இன்று சாப விமோசனம் ஆயிற்று. நீ இந்த அமுதசுரபியிலிருந்து அன்னம் அளித்து என் பசியைத் தீர்த்தாய். உனக்குக் கோடி நமஸ்காரம். இனிமேல் என்னால் பறக்க முடியும் என்று நினைக்கிறேன். போய்வருகிறேன், அம்மா. நான் காஞ்சனபுரத்துக்குப் போய் என் ஆருயிர்க்கணவனைக் காணவேண்டும். உலகில் வாழும் மக்களின் வருத்தம் நீங்க வேண்டி முனிவர்கள் தவம் புரியும் சக்கரவாளக் கோட்டம் என்ற ஓர் இடம் இவ்வூரில் உண்டு. நீ அங்கேயுள்ள உலக அறவி என்ற இடத்துக்குப் போ. அங்கே பசி பட்டினியால் வாடி வருந்துபவர் பலர் காத்திருப்பார்கள்'' என்று சொல்லிவிட்டுக் காய

சண்டிகை வட திசையாகக் காஞ்சனபுரத்தை நோக்கிப் பறந்து சென்ருள்.

அவள் சொன்னபடியே மணிமேகலையும் உலக அறவியை அடைந்து அதை மூன்று முறை வலம் வந்து, மன மொழி மெய்களால் நகரத்தின் அதி தேவதையான சம்பாபதியை வணங்கினாள். பிறகு அவள், வெயில் சுட வெம்பிய காட்டில் மழை சொரிவது போல் அமுத சுரபியுடன், பசியால் வருந்தும் அநாதை மக்கள் வாழும் அம்பலத்தில் புகுந்தாள். அங்குள்ள கணக்கற்ற ஏழைகளுக்கு அவர்கள் ஆசை தீரச் சோறு கொடுத்தவண்ணம் இருந்தாள். இத்தனை நாள் நம்பிக்கை இழந்து கிடந்த அவர்கள் முகங்களில் இன்று திருப்தியும் மகிழ்ச்சியும் கூத்தாடின.

## சித்திராபதி இளவரசனிடம் செல்லுதல்

மணிமேகலை பிக்ஷுணிக் கோலத்துடன் ஏழைகளுக்கு அன்னம் வழங்கிக்கொண்டு உலக அறவியிலேயே இருந்து வந்தாள். அவள் பாட்டி சித்திராபதிக்கு இதைக் கேட்டதும் கோபம் பொங்கிவந்தது. மற்ற நாடகக் கணிகையரெல்லோரையும் அழைத்து, 'இதென்ன கேலிக்கூத்தாக இருக்கிறதே! நம் குலத்தில் பிறந்த ஓர் அழகிய இளம்பெண் இப்படித் தவசி வேஷம் போட்டுக்கொண்டு பார்ப்பன விதவை போல் தானதருமம் பண்ணுவதாம்! சீச்சீ! இது சுத்தமாக நன்ருகவே இல்லை. நாம், தேனை உறிஞ்சிப் பூவை விட்டுப் பூவுக்குப் பூ தாவிக்கொண்டேயிருக்கும் வண்டுகள் மாதிரி; பலபேர் கைக்கு மாறும் குழல் போன்றவர்கள் நாம். நான் இந்தப் பெண்ணை எப்படி

யாவது பிக்ஷுணிக்கோலத்தை விட்டு விடச் செய்து உதயகுமரன் தேரில் ஏறிச்செல்லும்படி பண்ணுகிறேன். இவனுக்கு அவளிடத்தில் ஆசை உண்டு; இவள் கேட்டதையெல்லாம் கொடுப்பான். நான் இதைச் செய்து முடிக்காவிட்டால் நீங்கள் என் தலைமேல் ஏழு செங்கல்லை வைத்து ஊர் அறிய அரண்மனை நாடக அரங்கத்தைச் சுற்றிவரச் செய்து என்னை ஜாதியைவிட்டு நீக்கிவிடுங்கள்; நான் தயார்" என்றாள்.

பிறகு அவள் அரண்மனைக்குச் சென்று உதய குமரனைக் கண்டு வணங்கி மணிமேகலை இருக்கும் இடத்தைத் தெரிவித்தாள். தங்கள் குல முறைப்படி அவளை அவனுக்குத் தருவதாகச் சொல்லி அப்போதே போய் மணிமேகலையை அழைத்து வரும்படி வேண்டினாள். உதயகுமரன் முன்னாள் இரவு ஒரு தெய்வம் தோன்றி மணிமேகலையைப் பின்பற்றிச் செல்லாதே என்று தடை செய்ததையும் அப்படி மீறிச் சென்றால், தனக்குத் துன்பம் விளையும் என்று அது தெரிவித்ததையும் சித்திராபதிக்கு எடுத்துரைத்தான். சித்திராபதி நகைத்து, "இளவரசே, அந்தக் கனவையெல்லாமா நம்புகிறாய்! தேவர்கள்கூட மயங்கினார்கள் என்றால் நாம் எம்மாத்திரம்? இந்திரன் அகல்யையை விரும்பவில்லையா? அக்கினி ஸப்தரிஷிகளின் பத்தினிகள் மேல் இச்சை கொள்ளவில்லையா? சந்திரன் தாரையை நெருங்கவில்லையா? உன்னைப்போல் வீரர்கள்தான் இவளுக்கு ஏற்றவர்கள். நாடகக்கணிகையாரின் குல வழக்கம் கெடாதபடி பார்த்துக்கொள்வது உன்னைப் போன்ற அரசர்கள் பொறுப்பல்லவா?" என்றெல்லாம் கூறினாள்.

4 - JUN 1955
MADRAS

## உதயகுமரனும் மணிமேகலையும்

அவள் இப்படித் தூண்டவே உதயகுமரனும் உற்சாகத்துடன் உலக அறவிக்குச் சென்றான். அங்கே மணிமேகலை பலபேருக்கு உணவு அளித்துக்கொண் டிருப்பதைக் கண்டு, "நீ ஏன் இப்படித் தவக்கோலம் பூண்டாய்?" என்று கேட்டான். மணிமேகலை, 'பழம் பிறப்பில் இவன் நமக்குக் கணவனாக இருந்தான். ராஜகுமாரனாகவும் இருக்கிறான்' என்று அவனை வணங்கி, "பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டு இரங்கலும் இறத்தலும் உடையது இவ்வுடல்; ஆகையால் உயிர் நற்கதி அடையத் தவ ஒழுக்கத்தைக் கைக் கொண்டு தானதருமம் புரிந்து வருகிறேன்" என்றாள்.

அவன் அதைக் கவனியாமல் காமபரவசனாகித் தன்னையே நோக்குவதைக் கண்டு அவனிடமிருந்து தப்புவதற்கு வேறு வடிவம் கொள்ள நினைத்தாள். அவனை அங்கே சற்று இருக்கும்படி சொல்லிவிட்டுச் சம்பாபதியின் கோயிலினுள் புகுந்தாள். அங்கே மந்திரத்தின் உதவியால் காயசண்டிகைபோல் உருவெடுத்துக்கொண்டு கையில் ஓட்டை ஏந்தியபடி வெளியே வந்தாள்.

உதயகுமரன் திகைத்துவிட்டான். அவன் அருமை மணிமேகலை எங்கே போனாள்?—அவன் பரபரவென்று கோயிலினுள் நுழைந்து சம்பாபதியை வணங்கி, "தேவி! பிச்சைப் பாத்திரத்தைக் காய சண்டிகையிடம் கொடுத்துவிட்டு மணிமேகலை எங்கே போனாள்? சொல்லமாட்டாயா? நீ அவளை எனக்குக் காட்டாதுபோனால் இந்த இடத்தைவிட்டுப் போக மாட்டேன்" என்று ஆணையிட்டான். அப்போது

அங்கே உள்ள சித்திரங்களில் ஒன்று, "நீ ஆராய்ந்து பாராமல் சபதம் இட்டாய். அது பலிக்காது" என்றது.

முன்னே, தெய்வம் வந்து தனக்குப் புத்தி கூறியதையும், இப்போது இந்தச் சித்திரம் உரைத்ததையும் எண்ணி, மனங்கலங்கி 'மணிமேகலையைப்பற்றி நன்றாக அறிந்துகொண்டு தீர யோசித்து ஒரு முடிவுக்கு வரலாம்' என்று தீர்மானித்துக்கொண்டான். பிறகு அவ்விடத்தைவிட்டு நீங்கி அரண்மனைக்குத் திரும்பினான்.

மணிமேகலை, 'உதயகுமரனிடமிருந்து தப்புவதற்கு இது ஒன்றுதான் சரியான உபாயம்' என்று அறிந்து காயசண்டிகை உருவிலேயே ஊர்முழுவதும் பிச்சையெடுத்து எல்லா ஏழைகளுக்கும் அன்னம் இட்டு வந்தாள்.

## சிறைக்கூடத்தை அறக்கூடமாக்குதல்

ஒரு நாள் அவள் நகரத்திலுள்ள சிறைச்சாலையை அடைந்து அங்கே பசியால் வருந்திய கைதிகளுக்கு உணவளித்தாள். ஒரு பாத்திரத்திலிருந்தே பல பேருக்கு அன்னம் இடுவதைக் கண்டு சிறை அதிகாரியும் காவலாளரும் வியப்புற்று அந்த அதிசயத்தை அரசனுக்குத் தெரிவிக்கச் சென்றார்கள்.

சோழ மன்னனான மாவண்கிள்ளி அப்போது அரண்மனை உத்தியானவனத்தில் மகாபலியின் வம்சத்தைச் சேர்ந்த ஓர் அரசனின் மகளாகிய சீர்த்தியென்னும் ராணியுடன் உலாவிக்கொண்டிருந்தான். அங்கே இராசமாதேவிக்கு, இரண்டு மயில்களும் ஓர் அன்னமும் சேர்ந்து நடனமாடுவதைக் காட்டிக்

கொண்டிருந்தான். அருகருகில் நிற்கும் மூங்கில் மரம் ஒன்றையும் ஒரு கடம்ப விருக்ஷத்தையும் கிருஷ்ண பலராமர்களுக்கு ஒப்பிட்டான். உத்தியானவனத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவர்கள் 'மகத வினைஞரும் மராட்டக் கம்மரும் அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும் தண்டமிழ் வினைஞரோடு' செய்து முடித்த அரண்மனை மண்டபத்தை அடைந்தார்கள். பவளத் தூணும் முத்துத்தாமமும் அமைந்து தங்கத் தகடு வேய்ந்தது அது.

மன்னனும் அரசியும் அந்தப் பசும் பொன் மண்டபத்தில் அழகிய ஆசனத்தில் அமர்ந்தார்கள். அந்தச் சமயம் அறிந்து சிறையதிகாரி அங்கே வந்து, "இத்தனை நாளாக யானைத் தீ என்ற பசி நோயால் வருந்திக் கொண்டிருந்த காயசண்டிகை என்னும் மாது சிறைச் சாலைக்கு வந்து ஒரே பாத்திரத்திலிருந்து கைதிகளுக்கு அன்னம் இட்டாள். எடுக்க எடுக்கக் குறையாமல் அதில் உள்ள அன்னம் வளர்ந்துகொண்டே யிருக்கிறது" என்று தெரிவித்தான். அரசனும் காய சண்டிகை உருவில் இருக்கும் மணிமேகலையை வரவழைத்து, "நீ யார்?" என்று கேட்டான்.

அதற்கு அவள், "உனது நாட்டில் வரையாமல் மழை பொழிந்து வளம் சிறந்து செங்கோல் தவருமல் நீ வாழவேண்டும். நான் ஒரு வித்தியாதர மகள். இந்த ஊரில் வேறு வடிவங்கொண்டு திரிகிறேன். யானைத் தீ என்னும் கடும் பசியைப் போக்கிய இந்தப் பிச்சைப்பாத்திரம் தெய்வ அநுக்கிரகத்தால் எனக்குக் கிடைத்தது. இதைக்கொண்டு நாட்டிலுள்ள பசிக் கொடுமையை ஒழிக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்ருள். "நல்ல கைங்கரியந்தான் செய்து வருகிருய்;

சந்தோஷம். உனக்கு எது வேண்டுமோ கேள்; அந்தச் சௌகரியமெல்லாம் செய்து தருகிறேன்'' என்ருன் அரசன்.

"அரசே! அந்தக் கொடுஞ் சிறையை அழித்துத் தரும சத்திரமாக்கித் தரவேண்டும். இதுதான் என் வேண்டுகோள்'' என்ருள் மணிமேகலை.

அரசனும் அவள் விரும்பியபடியே செய்யுமாறு கட்டளையிட்டான். விரைவில் அந்தக் கொடுஞ் சிறைக்கூடம் அழிந்து அவ்விடம் பிரார்த்தனை ஒலி நிரம்பிப் பலவகையான புண்ணிய கைங்கரியங்களும் நிகழும் அறச்சாலையாக மாறியது. அதில் ஒரு புத்த பீடிகையும் மாணவர் தங்கும் விடுதியும் மடைப் பள்ளியும் போஜனகூடமும் இருந்தன. மணிமேகலை தினந்தோறும் அந்தக் கூடத்தில் உணவைப் பகிர்ந்தளித்துவிட்டுச் சக்கரவாளக் கோட்டத்தில் வசித்து வந்தாள்.

## உதயகுமரன் மீண்டும் வருதல்

உதயகுமரன் மறுபடியும் சக்கரவாளக் கோட்டத்துக்குச் சென்ருன். மணிமேகலைதான் காயசண்டிகையாக உருவெடுத்திருக்க வேண்டுமென்ற சந்தேகம் அவன் மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது. அவள் இருந்த அம்பலத்தை நெருங்கினுன் இளவரசன். சாப விமோசனகாலம் கடந்தும் தன் மனைவி காயசண்டிகை திரும்பாததால் ஊர் முழுவதும் தேடிவிட்டுக் காஞ்சனன் அதே சமயம் அவ்விடத்தை வந்து அடைந்தான். காயசண்டிகை உருவில் மணிமேகலை நிற்பதைக் கண்டதும் அவளைத் தன் மனைவிதான் என்று எண்ணி,

"உன்னை வருத்திய பசிநோய் ஒழியத் தேவர்கள் இதை உனக்குக் கொடுத்தார்களா என்ன?" என்று பழைய அன்பும் ஆதரவும் தோன்ற அவளை அணைத்துக்கொள்ள நெருங்கினான். ஆனால் அவள் அவனை மதியாமல் இருக்கவே வியப்புற்று நின்றான். அவள் அவனைவிட்டு நீங்கி உதயகுமரன் அருகில் சென்று அவனுடன் பழகியவள் போல் பேச ஆரம்பித்தாள். அங்கே தற்செயலாக வந்த ஒரு முதியவளைச் சுட்டிக் காட்டி, "மன்னவன் மகனே, இந்த நரைமூதாட்டி சிறு வயதில் என்னைவிட அழகாக இருந்திருக்க வேண்டும், இப்போது பார்: தலைமயிரெல்லாம் நரைத்து, தோல் சுருங்கி, வண்ணம் திரிந்து கண் பஞ்சடைந்து கிடக்கிறாள். இதுதான் உடலின் இயற்கை. ஆகையால் ஆசையை ஒழித்து உயர் பொருளை நாடு" என்று சொன்னாள். உதயகுமரனுக்கு அவள் உபதேசம் காதில் ஏறினால்தானே? அவன் காம பரவசனாகி அவளை நோக்கியபடி நின்றான். மணிமேகலையே இப்படி மாறுவேஷம் பூண்டிருக்கிறாள் என்ற அவன் எண்ணம் உறுதிப்பட்டது. காஞ்சனனோ காயசண்டிகை தன்னைக் கவனியாமல் உதயகுமரனுடன் நெருங்கிப் பழகுவதைக் கண்டு, இளவரசன் மனத்தை அவள் கொள்ளை கொண்டுவிட்டாள் என்று எண்ணிச் சினங் கொண்டான். காஞ்சனன் அங்கு இருக்கவே உதயகுமரன் சந்தேகம் கொண்டு, 'இன்று இரவு எவரும் அறியாமல் இங்கே வந்து மணிமேகலை என்ன செய்கிறாள் என்று பார்ப்போம்' என்று தீர்மானித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

## காஞ்சனன் உதயகுமரனைக் கொல்லுதல்

காஞ்சனனும் அன்று இரவு இளவரசன் ரகசிய மாகக் காயசண்டிகையைக் காணவருவான் என்று ஊகித்து வாளை உருவி வைத்துக்கொண்டு அங்கேயே ஒளிந்திருந்தான்.

உதயகுமரன் நள்ளிரவில் தான் தீர்மானித்த படியே மணிமேகலை மேலுள்ள ஆருக் காதலினால் அவ் விடத்தை வந்தடைந்தான். காஞ்சனன் அவன்மேல் சட்டென்று பாய்ந்து வாளால் இரண்டு துண்டாக அவனை வெட்டியெறிந்தான். இதைக் கண்டு திகைத் திருந்த மணிமேகலையை அணுகி, "காயசண்டிகே! புறப்படு சீக்கிரம், புறப்படு! காஞ்சனபுரம் செல் வோம்" என்றான். அப்போது அங்கே தூணில் உள்ள கந்திற்பாவை, "காஞ்சன, இவளை நெருங்காதே! இவள் காயசண்டிகை அல்ல; தன்னிடத்தில் மோகங் கொண்ட உதயகுமரனிடமிருந்து தப்புவதற்காக மணிமேகலை இவ்வுருவில் இருக்கிறாள். உன் மனைவி உன்னைக் காண வரும் ஆவலில் தெய்வகியதியை மீறி விந்தியாவாசினியின் கோயிலுக்கு மேல் பறந்து சென்றாள். கோபம் தாங்காமல் உடனே அந்தத் தெய் வம் அவளைச் சாயையினாலே இழுத்துத் தன் வயிற் றில் அடக்கிக் கொண்டுவிட்டது. நீ அநியாயமாக இவ் விளவரசனைக் கொன்றுவிட்டாய்! ஆனாலும் என்ன செய்வது? அவன் பூர்வஜன்மத்தில் செய்த வினை; நீ கருவியாக இருந்தாய்!" என்றது.

காஞ்சனன் அதைக் கேட்டு வியப்பும் வருத்தமும் அடைந்து உள்ளம் நொந்து கைலைக்குத் திரும்பினான்.

உதயகுமரன் வெட்டுண்டு விழுந்த ஓசையைக்

கேட்டு மணிமேகலை திடுக்கிட்டு எழுந்தாள். தன்னை நோக்கிக் காஞ்சனன் வந்ததும் கந்திற்பாவை கூறிய அற்புத மொழிகளையும் அவள் கேட்டாள். பிறகு காஞ்சனன் புறப்பட்டுச் சென்றதையும் கவனித்தாள்.

## கந்திற்பாவை வருவதை உரைத்தல்

ஒவ்வொன்றாக இவ்வதிசய நிகழ்ச்சிகளைக் கண்டு இத்தனைநேரம் நின்ற மணிமேகலை தன் சுய உருவை எடுத்துக்கொண்டாள். முன்பிறப்பில் கணவனாக இருந்து இப்பிறவியிலும் தன் நெஞ்சைக் கவர்ந்த உதயகுமரனின் சிதைந்த உடலைத் தன் மடியில் வைத்துக்கொண்டு புலம்பவேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. இவ்வாறு எண்ணிச் சவத்தை நெருங்கும்போது கந்திற்பாவையிலிருந்து தெய்வம், "நீ அவனிடம் செல்லாதே! உனக்கு அவன் கணவனாக இருந்தது முன் ஜன்மத்தில் மட்டுமல்ல; அதற்கு முந்தின எத்தனையோ பிறவிகளிலும் இருந்திருக்கிறான். நீயோ இப்போது நிர்வாண நிலையை அடையும் மார்க்கத்தில் இருக்கிறாய். பிறப்பு இறப்பினால் உண்டாகும் துன்பங்களினின்று மீளப்போகிறாய். சாதாரண மனிதரைப்போல் துக்கித்துப் புலம்பாதே" என்றது.

மணிமேகலை, "இங்கே எவருக்கும் உண்மையை உரைக்கும் தெய்வம் நீதானோ?" என்று கேட்டாள்.

"ஆமாம். என் பெயர் துவதிகன். நான் இந்தப் பதுமையில் வாழும் தெய்வம்; எல்லாவற்றையும் தெரிவிக்கும் சக்தி எனக்கு உண்டு" என்றது அப்பாவை.

"அப்படியானால் முன் ஜன்மத்தில் ஏன் என்

கணவன் திட்டிவிடம் என்ற பாம்பு கடித்து இறக்க வேண்டும்? இப்போதும் காஞ்சனன் வாளுக்கு அவன் இரையானதன் காரணம் என்ன?'' என்று மணி மேகலை கேட்டாள்.

''காயங்கரை ஆற்றங்கரையில் நீயும் இராகுல னும் தங்கியிருந்தபோது ஒருநாள் பிரமதரும முனி வரை அமுது செய்தருளும்படி வேண்டினீர்கள். விடியற்காலையில் வரவேண்டிய உங்கள் பரிசாரகன் சற்றுத் தாமதித்து வந்தான்; அதனல் முனிவரைக் காக்க வைக்க வேண்டியதாயிற்று. உன் கணவனுக்கு அவன்மேல் கோபம் பொங்கிவந்தது. பிறகு பரிசாரகன் சுடச்சுட அமுது செய்து எடுத்து வரும்போது 'உன் புருஷனது முகத்தைப் பார்த்துக் கை நடுங்கிப் பாத் திரத்தைக் கீழே போட்டு அமுதைமெல்லாம் கொட்டி விட்டான். இதைக் கண்டு உன் கணவன் கடுஞ்சினம் தலைக்கேற அந்தப் பரிசாரகனை இரண்டு துண்டாக வெட்டியெறிந்தான். அந்தக் கொடிய வினையின் பலனே இராகுலன் முன் ஜன்மத்தில் பாம்பு கடித்து இறந்தான்; இப்போதும் காஞ்சனன் கையால் வெட்டுண்டான்'' என்றது கந்திற்பாவையிலுள்ள தெய்வம்.

மணிமேகலை உதயகுமரனது கதியை எண்ணிக் கண்ணீர் சிந்தியவண்ணம், வருங்காலத்தில் தனக்கு என்ன அநுபவங்கள் நேரும் என்று கந்திற்பாவையைக் கேட்டாள். அத்தெய்வம், ''உன்னை அரசன் சிறை யில் இடுவான். அது தெரிந்த இராசமாதேவி உன்னை மீட்டுத் தன்காவலில் வைத்துக்கொள்வாள். பிறகு பல துன்பங்களினின்று தப்பி நீ சாவகநாடு சென்று அங்கே புண்ணியராஜனகப் பிறந்துள்ள ஆபுத்திரனைக்

காண்பாய். அவனை மணிபல்லவத்துக்கு அழைத்துப் போய் அவன் பழம் பிறப்பை அவனுக்கு நினைவூட்டுவாய். அவன் தன் நாடு திரும்பினதும், உனக்குப் புகார் நகரம் அழியப்போகும் செய்தி முன்னதாகவே தெரியும். பின்பு நீ வஞ்சி மாநகருக்குப் போவாய். அங்கே உன் தாயான கண்ணகியின் கோயிலை அடைந்து பத்தினித் தெய்வத்தை தொழுவாய். அதற்குப் பின் முதிய முனிவன் வடிவங்கொண்டு பல சமயங்களின் நுண்மைகளை சமயக்கணக்கரிடமிருந்து அறிந்துகொள்வாய். அங்கே கோவலனுடைய தந்தைமூலம் புகார் நகரம் கடலில் மூழ்கிய செய்தியையும்,மாதவியும் சுதமதியும் அறவண அடிகளும் காஞ்சிக்குப் போய்விட்டதையும் தெரிந்து கொள்வாய். காஞ்சியில் பெரும் பஞ்சம் என்று கேள்விப்பட்டு அமுதசுரபியுடன் அங்கே செல்வாய்; எல்லாருடைய பசிப்பிணியையும் போக்குவாய். பிறகு அறவண அடிகள் உனக்குத் தருமம், தவம், வாழ்க்கையின் லக்ஷியம் முதலியவற்றைக் குறித்து உபதேசம் செய்வார். நீ தவவொழுக்கத்தில் சிறந்து விளங்கிப் புத்த பகவன் நிர்வாண நிலையை அடையக் காட்டிய வழியை உறுதியுடன் பின்பற்றுவாய். பின்னர் மகதநாட்டில் பல முறை ஆண் பிறவி எடுத்துக் கடைசியில் நிர்வாண தசையை அடைவாய்'' என்றது.

## முனிவர்கள் நிகழ்ந்ததை அரசனுக்கு உரைத்தல்

மணிமேகலை எல்லாவற்றையும் கேட்டுக் கவலையொழிந்து அமைதியாக இருந்தாள். அப்போது சூரியோ

தயமாயிற்று. காலை வேளையில் சம்பாபதி கோயிலுக்கு வந்து தெய்வத்தை வழிபடுவோர் சிலர் அங்கே இளவரசன் உடல் வெட்டுண்டு கிடப்பதைக் கண்டு, சக்கரவாளக் கோட்டத்து முனிவர்களிடம் சென்று அந்தச் செய்தியைத் தெரிவித்தனர். முனிவர்கள் மணிமேகலையை அழைத்து வினவவே அவள் தனக்குத் தெரிந்த வரை எல்லா நிகழ்ச்சிகளையும் கூறினாள். முனிவர்கள் அரசனிடம் சென்று நடந்ததைத் தெரிவித்து, "அரசே! இன்று மட்டுமல்ல; முன் காலத்திலும் இந்நகரில் காமவிகாரத்தில் மயங்கிக் கற்புடைய பெண்களை வருத்தி உதயகுமரனைப் போல் கொலையுண்டவர் எத்தனையோ பேர் உண்டு. அந்த நாளில் பரசுராமன் க்ஷத்திரியர்களை வேரறுக்க எண்ணி வெட்டி வீழ்த்தி வந்தான். அப்போது காந்தன் என்ற சோழன் தான் க்ஷத்திரியனானதால் அம்முனிவனின் வாளினின்று தப்பக் கணிகை வயிற்றில் பிறந்த தன் மகனான ககந்தனைச் சிம்மாதனத்தில் அமர்த்தினான்; க்ஷத்திரியனல்லாத ககந்தனுடன் பரசுராமன் போர் புரியவில்லை. அப்படி ஆண்டுவந்த ககந்தனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுள் இளையவன், மருதி என்ற ஒரு பிராம்மண ஸ்திரீ காவிரியில் குளித்துவிட்டுத் திரும்பும்போது அவளைக் கண்டு மயங்கித் தகாத வார்த்தை பேசினான். அவள் மனங்கலங்கி உடனே பூதச்சதுக்கம் சென்று அங்குள்ள காவல் பூதத்திடம், 'பத்தினிப் பெண் பெய் என்றால் மழை பெய்யும் என்பார்கள்; அப்படிப்பட்ட கற்புடையவளான நான் இவன் உள்ளத்தைக் கவர்ந்ததேன்?' என்று முறையிட்டாள். சதுக்கத் தெய்வம், 'நீ கணவனைத் தவிர வேறு எவரையும் நினைப்பதில்லை என்பது உண்மை.

தான்; ஆனாலும் நீ ஆட்டம் பாட்டம் பொய்க் கதைகளை விரும்பி அவைகளைப் பார்க்கப் போகிறாய். அதனால் உனக்குக் காமுகர்களைச் சுட்டெரிக்கும் சக்தி இல்லை. இன்னும் ஏழு நாளில் அரசன் அவனை அந்தக் குற்றத்துக்காகத் தண்டிப்பான்; பயப்படாதே!' என்று ஆறுதல் கூறியது. அப்படியே ககந்தனும் தன் இளைய மகனை ஏழுநாளைக்குள் வெட்டிவிட்டான். சில நாட்கள் கழிந்தபின் அரசனுடைய மூத்த மகனும் இதே மாதிரி நடந்துகொண்டான். விசாகை என்னும் சிறந்த கன்னிகையைக் கண்டு மோகங்கொண்டு தன் தலையில் அணிந்துகொண்டிருந்த ஒரு மாலையை அவள் கழுத்தில் இட வந்தான். 'இவன் ஒருவன் தானே உரிமைக்கு இருக்கிறான்' என்றுகூடப் பாராமல் ககந்தன் அவனையும் வெட்டி வீழ்த்தினான். அரசே! பஞ்சமா பாதகங்களுள் கொலை, களவு பொய் இவைகளை எப்படியாவது சிரமப்பட்டுக் கடிந்துவிட முடியும்; ஆனால் காமத்தை வெல்லுவது அரிய செயலாகும். அதனால்தான் எல்லாவற்றையும் துறப்பதற்குமுன் அதை வெல்ல வேண்டும் என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள்' என்றனர்.

கிள்ளி வளவன் அவர்களை நோக்கி, "சூரிய வம்சத்தில், ஒரு பசுங்கன்றைக் கொன்றதற்காகத் தன் மகன்மேல் அவ்விதமே தேரைச் செலுத்திய அரசனது பரம்பரையைச் சேர்ந்தவன் நான். ஆகையால் என் மகன் இறந்ததைக் குறித்து நான் வருந்தவில்லை. நான் இட வேண்டிய தண்டனையைக் காஞ்சனன் இட்டு விட்டானே என்ற வருத்தந்தான் எனக்கு" என்று சொன்னான். உதயகுமரனுக்கு வேண்டியவர்களும் முரட்டு ஜனங்களும் மணிமேகலை மீது கோபங்

கொண்டு அவளைத் துன்புறுத்துவார்களே யென்று அரசன் அவளைக் காவலில் வைத்திருக்கும்படி உத்தர விட்டான்.

## இராச மாதேவியின் சூழ்ச்சி

இராச மாதேவியான சீர்த்தி, தன் மகன் இறந்த செய்தியைக் கேட்டு மிகவும் வருந்தினாள். விலை மகளாக இருந்தும் தன் மகனுடைய விருப்பத்துக்கு இணங்காமல் மணிமேகலை காயசண்டிகை வேஷம் பூண்டு அவனைக் கொல்ல வைத்தது ராணிக்குச் சகிக்க வில்லை. மணிமேகலைமீது அவளுக்குக் கரை கடந்த கோபம். வாசந்தவை என்னும் முதியவள் அவள் வருத்தத்தை நீக்கிப் பல ஆறுதல் மொழிகள் கூறிச் சென்றாள். தன் துயரத்தை வெளிக்குக் காட்டாத படி இராச மாதேவி அரசனிடம்போய், "மணிமேகலை யைச் சிறையில் வைத்திருப்பது தகுதியன்று; அவள் ஒரு தவறும் செய்யவில்லை. என்னோடு அந்தப்புரத் தில் பத்திரமாக இருக்கட்டுமே" என்று நெஞ்சில் வஞ்சனையுடன் உத்தரவு அளிக்கும்படி கேட்டாள்.

அரசனும், "அப்படியே செய்கிறேன், அவளுக்குக் கெடுதி ஒன்றும் நேரக்கூடாதே என்றுதான் காவலில் வைத்தேன்" என்றான்.

இராச மாதேவி மணிமேகலையை அந்தப்புரத்தி லுள்ள ஓர் அறையில் இருக்கும்படி செய்தாள். ஊமத்தை விதையிலிருந்து மயக்க மருந்து செய்து அதை மணிமேகலைக்குக் கொடுத்து அவளைப் பைத் தியக்காரியாக்கப் பார்த்தாள். ஆனால் மணிமேகலா தெய்வத்தின் அருளால் அவளை அது ஒன்றும் செய்ய

வில்லை. பிறகு, இளங்காளை ஒருவனை அழைத்து ஒரு நாள் இரவு மணிமேகலையைத் துன்புறுத்தும்படி சொல்லியனுப்பினாள். அவன் ஆவலுடன் அந்த அறையின் உள்ளே நுழைந்தான். ஆனால் அங்கே தான் எதிர்பார்த்த மடந்தைக்குப் பதில் அரக்கனைப் போல் பயங்கரமாய்க் கன்னங்கரேல் என்று ஒருவன் கண்கள் சிவந்து உருள, காட்டுப் பன்றி போல் பல்லை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு வந்ததைவிட வேகமாக வெளியே ஓட்டம் பிடித்தான். மணிமேகலைதான் மந்திர சக்தியினால் அப்படி உரு மாறினாள் என்பது அவனுக்குத் தெரியாது. அரண்மனையை விட்டு வெளியே வந்தவன் அங்கே இருந்தால், இன்னும் என்ன என்ன ஆபத்தெல்லாம் நேருமோ என்று பயந்து சோழ நாட்டை விட்டே ஓடிப் போய்விட்டான்.

மணிமேகலைக்கு ஒரு கெடுதியும் நேராததையும் காமுகன் ஓடிவிட்டதையும் கண்டு இராச மாதேவிக்கு ஆத்திரம் பொறுக்கவில்லை. மணிமேகலைக்கு உடம்பு சரியாக இல்லை என்று சொல்லி அவளை ஓர் இரும்பறையில் இட்டுப் புழுங்கவைத்துக் கொல்லப் பார்த்தாள். அப்படியும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

## இராச மாதேவியின் மனமாற்றம்

மணிமேகலைக்குத் தெய்வசகாயம் இருக்கிறதென்று இதிலிருந்து உணர்ந்தாள் ராணி; தான் இழைத்தக்கொடுமைகளை மன்னித்தருளும்படி மணிமேகலையை வேண்டினாள். "என் அருமை மகன் இறந்து

போனதற்குநீதானே காரணம் என்றுஅவன்மேலுள்ள பாசத்தால் உன்மீது கோபங்கொண்டு இப்படியெல்லாம் செய்தேனேயொழிய வேறொன்றுமில்லை" என்றாள்.

"மாயை வந்து உன் கண்ணை மறைக்கிறது. அவன் உடல்மேல் பாசமா, உயிர்மேல் பாசமா உனக்கு? உடல்மேல் பாசமாயிருந்தால் ஏன் அதைத் தகனம் செய்யவேண்டும்? உயிர்மேல் பாசமானால் அவன் முன் ஜன்மத்தில் யாராக இருந்தான் என்று உனக்குத் தெரியுமா? என் கணவனான இராகுலனாக அவன் இருக்கும்போது, பாம்பு கடித்து அவன் இறக்கையில் நீ ஏன் அழவில்லை?" என்று மணிமேகலை கேட்டாள்.

"அவன் உன் புருஷனா?" என்று இராசமாதேவி வினவினாள்.

மணிமேகலை அவளுக்குத் தங்கள் இருவருடைய முற்பிறப்புக்களைப்பற்றிய விவரம் எல்லாம் கூறி, "அவன் உயிர்மேல் உனக்குப் பாசம் உண்டாயின் உலகில் வாழும் எல்லா உயிர்களையும் நீ அப்படிப் பாவிக்க வேண்டியது உன் கடமையாகும். உடல்தான் வேறு; உயிர் ஒன்றே என்பதை அறிந்துகொள். கோபம் பொல்லாதது. காமமும் அப்படிப்பட்டதே. நான் சொல்லப் போவதைக் கேள்: நெசவாளி ஒருவன் தன் மனைவிமேல் சந்தேகங் கொண்டு அவளை அடித்துத் துரத்திவிட்டான். அவள் தன் கைக்குழந்தையை விட்டுப் பிரிந்து விலைமகளாக வாழ்க்கை நடத்தி வந்தாள். பல வருஷம் கடந்தபின் அவள் பணக்காரியாகிப் பெரிய மாளிகையில் வசித்து வரும்போது அவள் மகன் இளங்காளையாக அவளிடம் வந்தான். அவனிடத்தில் அவளுக்கு ஏதோ பாசம் ஏற்படவே,

அவன் பெயரையும் ஊரையும் விசாரித்தாள். அவன் இன்னுன் என்று தெரிந்ததும் திகிலுற்றுப் பைத்தியக் காரிபோல் கூவி உண்மையைத் தெரிவித்தாள். அவன் அதைக் கேட்டதும் மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்தான். அவளும் பின்புறம் சென்று கிணற்றில் விழுந்து உயிர் விட்டாள். காம குரோதங்களால் வரும் பலன் இதுதான்'' என்ருள் மணிமேகலை.

இராச மாதேவி மனக்கலக்கம் நீங்கி மணிமேகலை தனக்கு உண்மையை அறிவுறுத்தியதற்குப் பெரிதும் மகிழ்ந்து அவளை வணங்கினுள். மணிமேகலை அவளைத் தடுத்து, "நீ எனக்கு மாமி முறை ஆகவேண்டும்; அதோடு மகாராணியாகவும் இருப்பதால் என்னை வணங்குவது சரியல்ல'' என்று அவளை அன்புடன் வணங்கினுள். இராச மாதேவி மணிமேகலை யைத் தழுவி அணைத்துக்கொண்டு தான் அவளுக்கு இழைத்த தீங்குகளை எண்ணிக் கண்ணீர் உகுத்தாள்.

## சித்திராபதியின் ஏமாற்றம்

மணிமேகலை சிறைப்பட்ட செய்தியை அறிந்து சித்திராபதி இராச மாதேவியிடம் வந்து அவளை விடு, வித்து அவளைத் தனக்குப் பின் அரண்மனை நாடகக்கணி கையர் நூற்றிருப்தொரு பேருக்குத் தலைவியாக்கும்படி வேண்டினுள். ஆனுல் அரசி, ‘'அவள் இனிமேல் உன்னை நெருங்கக்கூட மாட்டாள்; உன் வீட்டிலும் நுழைய மாட்டாள். நீயோ கள்ளுண்டு, பொய் பேசி, கண்டவர்மீதும் காமுற்று உயிர்களைக் கொன்று இழி தொழிலில் மனம் செலுத்துகிருய்! இங்கே நில்லாதே, போ!'' என்று அவளை வெருட்டிவிட்டாள். சித்திரா

பதிக்கு மணிமேகலையின் குணம் தெரியுமாதலால் அவளிடமும் பேசத் தைரியமின்றி ஏமாற்றமுற்று, அவ்விடத்தை விட்டு நழுவினுள்.

## அறவண அடிகள் உரைத்தது

மணிமேகலை காவலில் வைக்கப்பட்ட செய்தியைக் கேட்டு மாதவி வருந்திப் புலம்பினுள். பிறகு சுதமதிக்கும் அதைத் தெரிவித்து, அறவண அடிகளைக் காணச் சென்ருள். அவரை வணங்கி அவரையும் தன்னேடு அழைத்துக்கொண்டு இராச மாதேவியிடம் சென்ருள். அரசியும் அம்முனிவரை உபசரித்து மணிமேகலையை அழைத்துச் செல்ல யாதொரு தடையுமில்லை என்று தெரிவித்தாள். பின்பு அவள் கேட்டுக்கொண்டபடி பௌத்த தருமத்தின் மூலதத்துவங்களை அறவணஅடிகள் எடுத்துரைத்தார். மற்றச் சமய உண்மைகளை ஆராய்ந்து அறிந்தபின்னர் மணிமேகலைக்குப் பின்னும் சில அரிய விஷயங்களைப் போதிப்பதாகத் தெரிவித்தார்.

## மணிமேகலை சாவகநாடு செல்லுதல்

அறவண அடிகள் உரைத்த மொழிகளை மறவாதிருக்கும்படி இராச மாதேவி முதலியோருக்கு அறிவுறுத்தியபின் மணிமேகலை அடிகளை நோக்கி, "இங்கே நான் நிம்மதியாக இருக்க முடியாது. 'உதயகுமரனுக்கு இவள் எமனுய் இருந்தாள்' என்று ஜனங்கள் பேசிக்கொள்வார்கள்; அன்று நடந்த பாழும் சம்பவங்களின் நினைவு வந்து என்னை வருத்திக்கொண்டே இருக்கும். ஆகையால் நான் ஆபுத்திரன் புண்ணிய

ராஜனாகப் பிறந்துள்ள சாவக நாட்டுக்குப் போகப் போகிறேன். அங்கே அவனைக் கண்டு மணிபல்லவத்துக்கு அவனை அழைத்து வருவேன். புத்த பீடிகை எதிரே அவன் தனது முற்பிறப்பை அறியும்படி செய்வேன். பிறகு வஞ்சிக்குப் போய் ஏழைகளுக்கு அன்னம் அளித்து, என் தாயாகிய கண்ணகியின் கோயிலுக்கும் சென்று அவளை வணங்குவேன். அதற்குப் பின் பல சமயக் கொள்கைகளையும் நுண்மையையும் அறிந்துகொண்டு உங்களிடம் வருவேன். தாங்கள் வாக்களித்தபடி அப்போது எனக்கு விவரமாகப் பௌத்த தர்மத்தைப் போதிக்கவேண்டும்'' என்றாள்.

பின்பு எல்லாரையும் வணங்கி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, சூரியாஸ்தமன சமயமானதால் சக்கரவாளக் கோட்டத்துக்குச் சென்றாள். அங்கே சம்பாபதியையும் கந்திற்பாவையையும் மூன்று முறை வலம் வந்து சாவக நாட்டிலுள்ள நாகபுரத்தை நோக்கிப் பறந்து சென்றாள். மணிமேகலை ஒரு பூஞ்சோலையில் இறங்கி அங்கே இருந்த ஒரு முனிவரை, "இது யாருடைய ஊர்?'' என்று வினவினாள். அதற்கு அவர், "பூமிசந்திரன் மகனான புண்ணியராஜன் இதை ஆள்கிறான். அவன் பிறந்தவுடன் பன்னிரண்டு வருஷகாலமாக நாட்டை வருத்தின பஞ்சம் நீங்கியது. அவன் பட்டத்துக்கு வந்ததிலிருந்து இங்கே தவறாமல் மழை பொழிகிறது. நாடும் வளமுற்று விளங்குகிறது'' என்றார். மணிமேகலை அங்கே தரும சாவகர் என்னும் முனிவரின் உபதேச மொழிகளைக் கேட்கச் சென்றாள். அப்போது புண்ணியராஜனும் அங்கே வந்து சேர்ந்தான். பிச்சைப் பாத்திரத்தைக் கையிலேந்தி நின்ற மணிமேகலையின் ஒப்பற்ற பேரழகைக் கண்டு அதிச

யித்து அவள் யார் என்று தன் பரிவாரத்தைக் கேட்டான். அதற்குப் பிரதானி, "இவள்தான் நான் புகார் நகரில் பார்த்த மணிமேகலை என்ற சிறந்த பெண் மணி. இந்த ஜம்பூத்வீபத்திலே அழகிலும் குணத்திலும் ஈகையிலும் இவளுக்கு ஈடு எவரும் இல்லை" என்றான்.

அப்போது மணிமேகலை, "அரசே! இது உன் ஓடு தான்; முற்பிறப்பில் சாலி வயிற்றில் பிறந்து பசுவினால் வளர்க்கப்பட்டு நீ ஆபுத்திரனாக வாழ்ந்த போது இது உன் கையில் இருந்ததை நீ மறந்து விட்டாய்" என்றாள்.

"என்னுடைய பழம் பிறப்பை நீ எப்படி அறிந்தாய்? எனக்கு எல்லாவற்றையும் தெரிவி" என்று புண்ணியராஜன் வியப்புடன் கேட்டான்.

## மணிமேகலை மீண்டும் மணிபல்லவம் செல்லுதல்

"மணிபல்லவத்துக்குப் போய் அங்கே உள்ள புத்த பீடிகையை மூன்று முறை வலம் வந்தால் உன் முற் பிறப்பு வரலாறு எல்லாம் உனக்குத் தெளிவாகத் தெரியும். நான் முன்னால் போகிறேன். நீ அங்கே வந்ததும் உன்னைக் காணுகிறேன்" என்று சொல்லி விட்டு மணிமேகலை எழுந்து ஆகாய வழியே மணிபல்லவத்துக்குச் சென்றாள்.

புண்ணியராஜன் தன் வளர்ப்புத் தாயாகிய அமர சுந்தரியிடம் போய் நடந்ததைத் தெரிவித்தான். ராஜ்யத்தைத் துறந்து துறவியாகவும் துணிந்துவிட்டான். ஆனால் அவன் மந்திரியாகிய ஜனமித்திரன் என்பவன்,

"அரசே! நீ வந்ததும் நாட்டில் பஞ்சம் நீங்கியது. நீ போய்விட்டால் நாடு வருந்தும். ஆகையால் உன் கடமையை விட்டு இப்படிச் செல்வது தகுதியன்று" என்று கூறினன்.

புண்ணியராஜனும் அதற்குச் சம்மதித்துத் தான் போய்த் திரும்பும் வரை நாட்டைப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டு ஒரு கப்பலில் மணிபல்லவத்துக்குப் புறப்பட்டுச் சென்றான். அங்கே மணிமேகலை தனக்கு முன்னலேயே வந்து காத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அங்குள்ள புத்த பீடிகையை மூன்று தரம் சுற்றிவந்து தன் பழம்பிறப்பை உணர்ந்தான். அதேசமயம் தீவதிலகையும் அவர்கள் எதிரே தோன்றி, மணலில் ஆபுத்திரன் புதைந்து கிடந்த இடத்தைக் காட்டினள். அதை அவர்கள் ஆழமாகத் தோண்டிப் பார்த்தபோது சில எலும்புத்துண்டுகள் அங்கே கிடைத்தன. புண்ணியராஜன் அங்கே வெண்சுண்ணத்தால் ஒரு சமாதி கட்டினன். மீண்டும் துறவறத்திலேயே அவன் மனம் சென்றது. ஆனல் மணிமேகலை, "நாட்டுமக்களுக்கு உணவும் ஆடையும் வசதிகளும் அளித்து அவர்களைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமை. ஆகையால் நீ திரும்பிச் செல்வதே முறையாகும்" என்று அவன் கொண்ட துணிவை மாற்றினள்.

மணிமேகலையிடம் தீவதிலகை காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கியதையும் அதன் காரணத்தையும் கூறத் தொடங்கினள்: "வடிவேல் கிள்ளிக்கு நாக கன்னிகையான பீலிவளை வயிற்றில் ஒரு மகன் பிறந்தான். அவனைப் பீலிவளை கம்பளச் செட்டியிடம் ஒப்படைத்து அரசனிடம் கொண்டு சேர்க்கும்படி

தெரிவித்தான். கம்பளச் செட்டியின் கப்பல் சேதம் அடைந்து தன் மகன் காணுமற் போய்விட்ட வருத்தத்தில் அரசன் வருஷந்தோறும் நடக்கும் இந்திர விழாவைத் தவறவிட்டான். அதனுல் மணிமேகலா தெய்வம், கோபமுற்றுக் கடலை ஏவி ஊரை அழிக்கச் செய்தது. சுதமதியும் உன் தாயும் அறவண அடிகளும் வஞ்சிக்குப் போய்விட்டார்கள்" என்ருள்.

## மணிமேகலை வஞ்சிக்குப் போதல்

புண்ணிய ராஜனைச் சாவக நாட்டுக்கு அனுப்பிய பின் மணிமேகலை வஞ்சி நகரத்துக்குப் பறந்து சென்ருள். அங்கே தன் தாயும் பத்தினித் தெய்வமுமான கண்ணகியையும் தந்தை கோவலனையும் வணங்கினுள் கோவலனின் முற்பிறப்பு வினையே அவன் அநியாயமாய்க் கொலையுண்டதற்குக் காரணம் என்றும், ஆகவே தான் மதுரையை எரித்தது தகாத செயல் என்றும் கண்ணகி தெரிவித்தாள். பின்னர் மணிமேகலையை வயோதிக முனிவர் வடிவில் பல சமய உண்மைகளை அறிந்துகொள்ளும்படி சொன்னுள் கண்ணகி.

## சமய நுண்மைகளை மணிமேகலை அறிதல்

மணிமேகலை அவ்வாறே பௌத்தரல்லாத பலர் ஆசிரமங்களுக்கும் மடங்களுக்கும் சென்று அவர்களுடைய முக்கியமான கொள்கைகளையும் சமயவாதங்களையும் அறிந்துகொண்டாள். வைதிகர், பிரம்மவாதிகள், நாராயணீயர் என்னும் வைணவர், சைவர், சாங்கியர், யோகியர், வைசேஷிகர், ஆஜீவகர், நிக்கிரந்

தர், பூதவாதிகளென்னும் லோகாயத சூன்யவாவதிகள் ஆகிய எல்லாரிடமும் சென்றும் அவர்களுள் ஒருவர் கொள்கையும் அவளுக்கு ஏற்கவில்லை. கடைசியாக அவள் அறவண அடிகளைத் தேடிக்கொண்டு பௌத்த விஹாரத்துக்குப்போனாள். அங்கே அவள் கோவலனுடையதந்தையைக்கண்டுவணங்கியதும் அவர், "எனக்கு எட்டுத் தலைமுறைக்கு முன் வாழ்ந்தகோவலன் என்ற என் மூதாதையை மணிமேகலா தெய்வம் ஒரு கடல் விபத்தின் போது காப்பாற்றியது. அவர் தான் பல மாடங்கள் கொண்ட இந்த அழகிய விஹாரத்தைக் கட்டினார்" என்றார். பிறகு அறவண அடிகள் மாதவி, சுதமதி இவர்களுடன் காஞ்சிக்குச் சென்றிருப்பதாகவும், அங்கே பெரும் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் மணிமேகலை போய் அமுதசுரபியின் உதவியால் அதைத் தீர்ப்பதே நலமாகுமென்றும் தெரிவித்தார்.

## மணிமேகலை காஞ்சிக்குச் செல்லுதல்

மணிமேகலை அவரை வணங்கிவிட்டுக் காஞ்சிக்குச் சென்றாள். அவ்வழகிய நகரில் கொடிய பஞ்சம் தாண்டவமாடியது. அவள் வரவை அறிந்து அவ்வூர் மன்னனும் அவன் மந்திரிகளும் சந்தோஷம் அடைந்தனர்; கந்திற்பாவை அதை முன்னரே தனக்குத் தெரிவித்திருப்பதையும் அவளுக்குச் சொன்னாள் அவள் அங்குள்ள பூஞ்சோலையில் ஒரு புத்த பீடிகையும், மணிமேகலா தெய்வத்துக்கும் தீவதிலகைக்கும் ஆலயங்களும் அமைக்கச் செய்தாள். பின்பு ஆயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு உணவளித்தாள். அந்தக் கூட்டத்தில் பதினெட்டு மொழி பேசும் பல

தேசவாசிகள் இருந்தனர். விரைவில் மேகம் கவிந்து கன மழை பொழியத் தொடங்கியது. அதோடு பஞ்சமும் தீர்ந்தது.

## மணிமேகலை பௌத்த பிக்ஷுணியாதல்

மணிமேகலை தன் தாயையும் சுதமதியையும் அறவண அடிகளையும் தேடப் புறப்படும்போது அவர்களே அச்சோலைக்கு வந்து சேர்ந்தனர். வெற்றிலையும் கர்ப்பூரமும் வைத்து அவர்களை வணங்கியபின் அவள் அறவண அடிகளிடம் தான் மற்றச் சமயங்களின் சாரத்தை வஞ்சியில் அறிந்துகொண்டதாகத் தெரிவித்தாள்.

"அவைகளுள் உனக்கு எது உண்மையானது என்று படுகிறது?" என்று அம்முனிவர் கேட்டார்.

"எல்லா மதங்களும் நன்ருகத்தான் இருக்கின்றன; உண்மையை விளக்க வழி தேடுகின்றன. ஆனால் எவற்றிலும் முழு உண்மை இருப்பதாகப் புலப்படவில்லை, சாதாரண ஜனங்களிடையே குழப்பத்தை உண்டுபண்ணிச் சண்டை சச்சரவைத்தான் கிளப்புகின்றன. திரும்பத் திரும்பப் பல தெய்வங்களும், பல கொள்கைகளும் பல மார்க்கங்களுமே உள்ளன. ஆனால் உலகின் இன்னலைத் தீர்ப்பது கருணை ஒன்றுதான். முன்னே தாங்கள் வாக்களித்தபடி பௌத்த தர்மத்தை எனக்குப் போதிக்க வேண்டும்" என்று வேண்டினாள் மணிமேகலை.

அறவண அடிகளும் அவ்வாறே அவளுக்கு நால்வகை வாய்மைகளையும், அறிவின்மை, அகங்காரம், கோபம், காமம் முதலான பன்னிரண்டு நிதானங்களை

யும்பற்றி விரிவாக எடுத்துரைத்தார். பின்பு பவப் பிணியைக் கடந்து நிர்வாண நிலை அடையும் மார்க் கத்தை அவளுக்கு உபதேசித்தார்.

அவள், "புத்த பகவன் எனக்கு அருள்வானோ?" என்று கேட்டாள்.

அவர், "தீமை விளைவதும் நம்மாலே; துன்பம் விளைவதும் நம்மாலே; தேறித் தெளிவதும் நம்மாலே; நற்கதி அடைவதும் நம்மாலே; வேறு எவராலும் அல்ல. புத்தன் வழி காட்டிவிடுகிறான்; அவ்வழியே செல்வது நம் கடமை" என்று போதித்தருளினார்.

பின்னர் அறம், தவம் என்பவற்றின் உட்கருத் தைப் புத்தபகவன் கூறியவாறு அவளுக்கு விளக்கினார்.

மணிமேகலை அதுமுதல் தவக்கோலம் பூண்டு பவப்பிணி அறுக்கும் தவத்தை மேற்கொண்டாள்.

முற்றும்

ARA PUBLIC LIBRARY
4 - JUN 1955
MADRAS